6

செந்தமிழ்ச் செல்வி

சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழக

மணிவிழா ஆண்டு

1920 – 1980



அரசு..—

சிலம்பு-ருச] வள்ளுவர் ஆண்டு-உ0க௧ தை, Feb. 80 [பரல்-சு.

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

14.2.80

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ௦கக, தை பிப்ரவரி 1980	பரல் ரு

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் மணிவிழா ஆண்டு

திருவள்ளுவர் ஆண்டு 2010 ஆகஃச்டுத் திங்கள் 16ஆம் நாளோடு நூற்பதிப்புக்கழகத்தின் 59ஆம் ஆண்டு முடிவுற்றது: தணிக்கை செய்யப்பெற்ற அதன் ஆண்டுக்கணக்கும், அறிக்கையும் கழகப்பங்காளிகட்கு 21—1—80இல் அனுப்பப்பெற்றுள்ளது. பதிவு செய்யப்பெற்ற திருநெல்வேலி நிலயத்தில் கழகப்பங்காளி களின் ஒப்புதல் பெறுவதற்குரிய ஆண்டுக்கூட்டம் 15-2-1980இல் நடைபெறுமென்று அதன்கண் தெரிவிக்கப்பெற்றுள்ளது.

2011 திருவள்ளுவர் ஆண்டு ஆகஃச்டுத் திங்கள் 16ஆம் நாள் கழகம் தோன்றி 60ஆம் ஆண்டு முடிவுறும் மணிவிழா ஆண்டிற் குரிய கணக்கினைத் தணிக்கைசெய்து கணக்கும், அறிக்கையும் 15—2—81 ல் பங்காளிகள் கூட்டத்திலே ஒப்புதல் பெற்றுக் கழகத்தின் மணிவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுதல் வேண்டும்.

தமிழ்நாட்டிலே நூற்பதிப்புக்கென 21--9--1920 இல் தோன்றிச் சீரோடும் சிறப்போடும் 60 ஆண்டுகள் நடைபெற்று வரும் கூட்டுப்பங்கு நிறுவனம் இஃது ஒன்றே எனப் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. இது தோன்றுவதற்குரிய காரணம் இங்கே நன்கு விளக்கப்பெறும்.

இக் கழகத்தைத் தோற்றுவித்தவரும் அன்பறிவு ஆற்றல் நிறைந்தவரும் எண்ணிய எண்ணியாங் கெய்தும் திண்ணியருமாகிய என் உடன்பிறந்த அருமைத் தமையனர் திருவாளர் வ. திருவரங்கம்

பிள்ளையவர்கள் 1900ஆம் ஆண்டில் எங்கள் தந்தையார் பிரிவுக்குப்பின் பாளையங்கோட்டை தூய சவேரியர் உயர்நிலைப் பள்ளியில் 7ஆம் வகுப்புக்குமேல் படிக்க முடியவில்லை. எனவே, 1906 ஆம் ஆண்டில் இலங்கைத் தலைநகர் கொழும்புக்கு வேலை தேடிச் சென்றார்கள். 1914ஆம் ஆண்டில் பல்லாவரம் மறைமலை யடிகளார் எழுதிய நூல்களில் சிலவற்றைப் படித்தும் அவர்கள் தமிழும் சைவமும்பற்றிச் சொற்பொழிவாற்றும் தனிப்பெருந் திறத் தினைக் கேட்டும் அவர்களை இலங்கைக்கு வரவழைக்க வேண்டு மென்று பேரவாக்கொண்டனர்.

அடிகளார் தூத்துக்குடி சைவசித்தாந்த சபைக்குச் சொற் பொழிவாற்றச் செல்வதுண்டு. அங்குள்ள என் அருமைத் தமை யனாரிடம் அன்புகொண்ட நெருங்கிய உறவினர்க்கு எழுதி அடிக ளாரைத் தாம் கொழும்புக்கு வரவழைக்க விரும்புவதைத் தெரிவித் தனர். அடிகளார் அதனைத் தெரிந்து என் தமையனார் விருப்பத் துக்கு இசைந்து இலங்கைக்குச் சென்றனர். அங்கே அவர்களை மூன்று திங்கள்வரை தங்கச்செய்து சொற்பொழிவுகள் ஆற்றுவதற் குத் தக்க ஏற்பாடுகள் செய்து பெரும்பொருள் தொகுத்துக் கொடுத் ததோடு அவர்கள் விரும்பும் நூல்களையும் வாங்கிக்கொடுத்தனர். தமக்கும் புத்தகங்கள் வாங்க வேண்டுமென்ற எண்ணந்தோன்றித் தாம் ஈட்டிய பொருளிலிருந்தும் புத்தகங்களை வாங்கித் தொகுத்து வரலானார். அப்போதே அவர்கட்கு நூல்நிலையத்தின் இன்றியமை யாமை தோன்றியது திருவருட் குறிப்பே.

மேலும் நாகையில் பிறந்த மறைமலையடிகளார்க்கும் திருநெல் வேலி மாவட்டத்தில் பொருநையாற்றின் கீழ்ப்பக்கமுள்ள பாளையங் கோட்டை நகரில் பிறந்த திருவரங்கனார்க்கும் நீக்கமரு அன்புப் பிணிப்பு ஏற்பட்டதும் திருவருட் குறிப்பே. 1911 ஆம் ஆண்டு மறைமலையடிகளார் சென்னைக் கிறித்தவக் கல்லூரியினின்று ஆசிரி யப் பணியைவிட்டு விலகிப் பல்லாவரத்தில் தங்கித் தமிழ்நெறிக்கும் சிவநெறிக்கும், தொண்டாற்றி வந்தார்கள். நூல்கள் எழுதுவதும், அவற்றை அச்சிட்டு விற்பதும், அயலூர்கட்குச் சென்று சொற் பொழிவு ஆற்றுவதுமாக அடிகளாருடைய வாழ்க்கை மிகவுஞ் சிறப் புற்று விளங்கியது. 1917 ஆம் ஆண்டில் மீண்டும் என் அருமைத் தமையனார் மறைமலையடிகளாரை இலங்கைக்கு அழைப்பித் தனர். அப்போதும் சொற்பொழிவுகட்கு ஏற்பாடு செய்து பெரும்பொருள் திரட்டிக் கொடுத்ததோடு திங்கள்வாரி வணிகப் பெருமக்கள் சிலரிடம் நன்கொடை பெற்று அனுப்பிவந்தனர். மேலும், பல்லாவரத்திலே அடிகளார் தாம் எழுதும் நூல்களை அச்சிட அச்சுக்கூடம் ஒன்று அமைப்பதற்கு இருபெரு வணிகர்

களிடம் தொகை பெற்றுக்கொடுத்தனர். அப்போதும் 3 திங்கட்கு மேலாக அடிகளாரை இலங்கையில் தங்கச் செய்தமையும் ஆகிய செயல்களால் அடிகளார்க்கும், திருவரங்கனுர்க்கும் ஏற்பட்ட அன்புப் பிணிப்பு மேலும் பெருகி வளர்மதிபோல் வளர்வதாயிற்று.

அதன்பின், என் அருமைத் தமையனுர் தம் பெயரையும் சங்கரநாராயணபிள்ளை என்ற தம் நெருங்கிய நண்பரொருவர் பெயரையும் இணைத்துத் திருசங்கர் கம்பனி என்ற பெயரில் புத்தக வணிக நிலையமொன்றை இலங்கையின் தலைநகரமான கொழும்பிலே தொடங்கினுர்கள். பின்பு 1918இல் இலங்கையை விட்டு நீங்கி நெல்லையையடுத்த தம்மூருக்கு வந்தார்கள். அதன்பின் பல்லாவரத்தில் மறைமலையடிகளாருடன் சிலகாலம் தங்கினுர்கள்.

பின்பு சென்னைமாநகரில் அஞ்சல் வகுப்பெண் 600 001 பகுதி யிலுள்ள பவழக்காரத்தெரு, 2ஆம் எண் (தற்போதைய எண் 87) வீட்டு முகப்பிலுள்ள ஓர் அறையில், தாம் இலங்கையில் தொடங்கிய திருசங்கர் கம்பெனியை நிறுவி விளம்பரஞ் செய்து, பதிப்பாளர் களிடம் புத்தகங்களை வாங்கி விற்றுவந்தனர். அப்போது ஆறுமுகத் தம்பிரான் உரையெழுதிய சேக்கிழார் பெரியபுராணம் நான்கு பாகம், மகாவித்துவான் சுப்பராய செட்டியார் உரை யெழுதிய பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் இரண்டு பாகம், நீதிபதி சி. வை. தமோதரனுர் அவர்கள் பதித்து வெளியிட்ட தொல் காப்பிய உரை நூல்கள், இலக்கண விளக்கம், சூளாமணி முதலிய நூல்கள் ஆகியவற்றையும் வாங்கி விற்று அவற்றைப் பதிப்பித்த குடும்பங்களுக்கு உதவிசெய்து வந்தமை அக் குடும்பத்தார்களால் மிகவும் போற்றப்பெற்றது.

மேலும் என் அருமைத் தமையனுர் மறைமலையடிகளாரைக் கொண்டு திருவாசகம் நான்கு அகவல்களுக்கு விரிவுரை எழுதச் செய்து 'செந்தமிழ்க்களஞ்சியம்' என்ற பெயரில் 32 பக்க அளவில் 12 பகுதிகளாக வெளியிட ஏற்பாடு செய்து அச்சிட்டு அதற்கு உறுப்பினர்கள் சேர்த்தனர்.

இப்படித் திருசங்கர்கம்பெனி புத்தக விற்பனைப் பணி நடந்து வருகையில், திருநெல்வேலியில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தொடங்குவதற்குரிய வாய்ப்பு சிவபெருமான் திருவருளால் ஏற்பட்டது. உயர்திரு தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் வேளாளர் பெருங்குடும்பத்தில் பிறந்து இந்துக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றுத் தம் உடன்பயின்ற மாணவர் என். எஸ். டி. சாரியாருடன் பெரம்பூரிலும், குரோம்பேட்டையிலும் தோல் பதனிடும்நிறுவனங்களில் பணியாற்றிப் பின்பு பெங்களூரில்

பெருஞ்செல்வர் ஒருவர் தொடங்கிய தோல்பதனிடும் பெரிய நிறுவனத்தில பணியேற்றுப் புகழ்பட வாழ்ந்து வந்தனர்.


அடுத்துத் திரு. விசுவநாத பிள்ளையவர்கள் நெல்லைக்குப் போயிருந்தபோது தம் மூத்த தமையனர் வழக்கறிஞர் திருவாளர் தி. செ. சுப்பிரமணியப் பிள்ளை என்ற பண்டாரம்பிள்ளை அவர்கள் நடத்திவந்த 'கே. எஸ். பேங்க்' என்ற பெயரிலுள்ள வங்கியில் மேலாளராகப் பணிபுரிந்த திருவாளர் மா. திரவியம்பிள்ளை அவர்களிடம் தெரிவித்தது வருமாறு :

''நாங்கள் தோல் பதனிடும் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறோம். நீங்கள் தமிழும், சைவமும் வளர்ப்பதற்கு ஒரு கூட்டுப் பங்கு நிறுவனம் (Public Limited Company) தொடங்கி நடத்துங்கள். யான் போதுமான உதவி செய்கிறேன்'' என்று மன முவந்து கூறினர்.

அதற்கு அவர்கள் ''யான் அதனைத் தனியே நடத்துவதற்கு உரிய திறமை இல்லாதவன். சென்னையில் மறைமலையடிகளார்க்கு மிகவும் நெருக்கமான அன்பர் திருவரங்கனர் 'திருசங்கர் கம்பெனி' என்ற புத்தக வணிகநிலையம் ஒன்றை நடத்தி வருகிருர். அவரைக் கலந்து இசைவார்களானல் இருவரும் சேர்ந்து பதிப்புத் துறைக்கென, கூட்டுப்பங்கு நிறுவனம் நிறுவலாம்'' என்று சொன்னர்கள். என் அருமைத் தமையனர் திருவரங்கம்பிள்ளையவர்கள் அதற்கு இசைவு தெரிவிக்கவே நெல்லை இந்துக் கல்லூரியில் அப்போது படித்துக்கொண்டிருந்த யான் அவ்விருவர்களால் புதிதாக அமைக்கப்பெறும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைத் ''திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் (மட்டிட்டது)'' என்ற திருப்பெயரில் தொடங்குவதற்கு வேண்டிய விதிமுறைகளை உயர்திரு. மா. திரவியம்பிள்ளையவர்களோடு கலந்து எழுதி வழக்கறிஞர் திருவாளர் தி. கோமதிநாயகம்பிள்ளை அவர்களிடம் காட்டுவதுண்டு.

பின்பு சென்னையிலிருந்து என் அருமை அண்ணனர் திருவாளர் திருவரங்கம்பிள்ளை அவர்கள் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்வதற்குத் திருநெல்வேலிக்கு வரவேண்டியதாயிற்று. அப்போது அவர்கள் தம்பியாகிய யான் சென்னைக்குப் போய்த் திருசங்கர் கம்பெனியின் பொறுப்பை ஏற்க வேண்டியவனனேன். இப்படி ஒரு நூற்பதிப்புக் கழகத்தைத் தொடங்குமாறு தூண்டிய அருட்செல்வர் திருவாளர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் முதற்கண் 10 ரூபா பெறுமானமுள்ள பங்குகள் நூறு எடுத்துத் தாம் தெரிவித்தவாறு ரூபா ஆயிரம் வழங்கி ஊக்குவித்தனர்.

அவர்கள் அவ்வாறு அப்போது ஊக்குவிக்காவிடில் இக் கூட்டுப் பங்கு நிறுவனம் ஏற்பட்டிருக்காதென்பது முற்றிலும் உண்மை யாகும் என்று நம்பலாம்.



திரு. தி. செ. வி.



திரு. மு. கா.

அடுத்து 1922ஆம் ஆண்டில் செட்டிநாடு பாகனேரியில் பிறந்த நூல்நிலேயப் பற்ருளர் திருவாளர் மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் நூறு பங்குகள் எடுத்து ஆயிர ரூபா அனுப்பி வைத்தனர். இவ் விருவர் பெயர்களும் 'விசுவநாதன்' என்ற திருப்பெயரைத் தாங்கியவர்களாக அமைந்திருப்பது கழகத்தின் மீது அருளுள்ளம் படைத்தவராகவும் புண்ணியக் கையினராகவும் போற்றப் பெறுபவராகின்றனர்.

என் அன்புத் தமையஞர் அவர்கள் சென்னையிலிருந்து நெல்லேக்குச் சென்று, திருவாளர் மா. திரவியம் பிள்ளே அவர்களோடு 21-9-1920இல் திருநெல்வேலி கூட்டுறவுக் கம்பெனி உதவிப் பதிவாளர் திருவாளர் சி. இராசகோபால் ராவ் அவர்கள் முன்பு "1913ஆம் ஆண்டு இந்திய கம்பெனிச் சட்ட"த் தின்படி பதிவு செய்து சான்றிதழ் (Certificate) பெற்ருர்கள். அதன் எண் 4, 1920—1921 ஆகும். தொடக்கச் செயற்குழு உறுப் பினர்கள் பதின்மரில் திருவாளர் மா. திரவியம்பிள்ளே அவர்களும், திருவாளர் வ. திருவரங்கம்பிள்ளே அவர்களும் கூட்டு அமைச்சர்க ளாயினர். ஓய்வு பெற்ற தாசில்தார் மா. வே. நெல்லேயப்ப பிள்ளேயவர்கள் தொடக்க முதல் 1938 வரை கழகத் தலேவராக அமர்ந்து அதன் வளர்ச்சிக்குத் தகுந்த துணே புரிந்தனர்.

இங்கே தலைவர்களில் ஏற்பட்ட மாற்றம் குறிப்பிடத்தக்கது 1938 முதல் 1948 முடிய நாகர்கோயில் வழக்கறிஞர் உயர்திரு ப. சிதம்பரம் பிள்ளையவர்கள் தலைவராக இருந்தனர். பின்பு 1948 முதல் இன்றுகாறும் பாகனேரி நூல்நிலையப் பற்றுளர் திருவாளர் மு. காசி விசுவநாதன் செட்டியாரவர்கள் தலைமையிற் கழகப்பணி சிறப்பாக நடைபெற அமர்ந்திருக்கின்றனர்.

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (மட்டிட்ட து) என்னும் பெயர் வைக்கப்பெற்று இன்றும் தமிழ் அறிஞர்களால் போற்றுதற்குரிய சிறந்த திருவளர் பெயராக விளங்குகின்றதென்பது அறிந்து இன்புறுதற்குரியது.

இந்தியா என்று சொன்னல் 'வட இந்தியா' 'தென் இந்தியா' என்று இரண்டாகப் பிரித்துக் கூறப்படும். கழகம் தொடங்கிய காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள நான்கு மொழி பேசும் இனத்தவரும் (திராவிடர்கள்) ஒன்ருகவே கூடி ஆட்சி நடத்தி வந்தனர். 1956இல்தான் தனித்தனியாகத் திராவிட மாநிலங்கள் பிரிக்கப் பெற்றுத் தனித்தனி ஆட்சி ஏற்பட்டது.

திருநெல்வேலி என்ற பெயருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. தென்குமரியில் கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் எஞ்சி நிற்கும் பகுதியே 'திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி' ஆகும். அதனைத் 'தென்றல் வந்துலவும் திருநெல்வேலி' என்றும் புகழ்வர். அது தண்பொருநையாற்றின் வளம் நிறைந்த மாநிலமும் அகத்திய முனிவர் வாழும் பொதிகைமலையும் உடையனவாகும். 'கழகம்' என்ற பெயர் அதற்குமுன் எந்த நிறுவனத்துக்கும் வைக்கப்பெற வில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர்கூட 'சங்கம்' என்று வழங்கினர்களே யொழியக் கழகம் என்ற பெயர் அமைக்கவில்லை. தனித்தமிழில் பற்றுக்கொண்ட தஞ்சைப் பெருமக்களும் 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' என்றுதான் பெயரிட்டனர்.

கழகம் என்ற பெயர் வைத்தமையினைப் போற்ருதார் இல்லை. அதன்பின் 'கழகம்' என்ற பெயரைச் சில நூற்பதிப்பு நிறுவனங்களும், அரசியல் கட்சிகளும் சூட்டிக்கொண்டன. எனவே, 'திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்' என்ற பெயர் உலகிற்கே ஒரு வரலாற்றுப் புதுமையை விளைத்துள்ளது என்று சொன்னல் அது மிகை யாகாது.

இனி அதன் நோக்கங்களைக் கீழே காண்போம்.

(1) பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை எல்லா நூல்களையும் வெளியிடுதல்.

(2) தமிழில் உள்ள சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடுதல்; தமிழைப்பற்றி மேல் நாட்டு அறிஞர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல். இம் முறையில் இதுகாறும் 1750 நூல்கட்கு மேல் வெளியிட்டுப் பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்றிருக்கின்றன.

(3) தமிழ் நூலாசிரியர்கள், தமிழ் நாட்டிலும், பிறநாடு களிலுமுள்ள தமிழறிஞர்கள், தமிழ் நூற்பதிப்பாளர்கள், ஆகியோர் திருவுருவப்படங்கள் பெரும்பாலானவற்றைத் தொகுத்தல்.

(4) தமிழிலும் பிறமொழிகளிலுமுள்ள திருக்குறள் பதிப்புக்கள் அனைத்தையும் தொகுத்து ஆசிரியர்கள் திருவுருவப் படங்களுடன் காட்சி அமைத்தல.

(5) கழகப் பணிகளையும் கொள்கைகளையும் வெளிப்படுத்து வதற்குச் 'செந்தமிழ்ச் செல்வி' என்ற திங்கள் இதழை 1923 முதல் தொடர்ந்து நடத்தி வருதல்; இம்மணிவிழா ஆண்டில் 54ஆம் சிலம்பு வெளிவந்து கொண்டிருக் கிறது.

(6) சைவப்பஞ்சாங்கம் (ஐங்காலக் குறிப்பு நூல்) ஒன்றை 1924 முதல் தொடர்ந்து வெளியிட்டு வருதல்.

(7) நான்கு ஆண்டுகளில் திருக்குறள் முழுமையும், கலித் தொகையிலிருந்து திருக்குறளைப் போன்ற இரண்டடி நீதித் தொடர்களில் 131 மட்டும் முடிவுறும்படி எடுத்துத் திருக்குறள் நாட்குறிப்பு (Thirukkural Diary) 1932 முதல் தொடர்ந்து வெளியிட்டு வருதல்.

(8) கழகப் பதிப்புக்களும், பிற பதிப்பாளர் வெளியீடுகளும் யாண்டும் கிடைக்கப் பெறவேண்டும் என்ற பெருநோக் கோடு தொடக்கத்திலேயே திருநெல்வேலித் தலைமைக் கழகத்துக்குச் சென்னையில் நடைபெற்ற திருசங்கர் கம்பெனியை நூற்பதிப்புக்கழகக் கிளையாக மாற்றி நடத்தி வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

(9) தமிழ் மொழிவளர்ச்சியின் பொருட்டுக் கழகம் திருநெல் வேலித் தென்னிந்திய தமிழ்ச் சங்கமும், சைவ சமய வளர்ச்சியின் பொருட்டுத் திருநெல்வேலித் தென் னிந்திய சைவசித்தாந்த சங்கமும் ஏற்படுத்தி விதி முறைகள் அமைத்துப் பதிவு செய்து கழக விதிப்

புத்தகத்தில் விளக்கியுள்ளபடி அறப்பணிகளைச் செய்து வருகின்றன. அவற்றிற்கு ஆண்டுதோறும் செய்த பணி விளக்கக் குறிப்புகளோடு கணக்கும் அறிக்கையும் அச்சிட்டுப் பங்காளிகளுக்கும் அனுப்பப்பெற்று ஆண்டுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படுகின்றன. சங்கப் பதிவாளர்களும் சரிபார்த்துச் சான்றிதழ் வழங்கு கின்றனர்.

பின்னர் மதுரை, கோவை, குடந்தை, திருச்சி ஆகிய பேரூர் களில் புத்தக விற்பனை நிலையங்கள் அமைத்தது, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் பற்றிய பதிப்பு நூல்களை மட்டும் விற்பதற்கு அரசு இசைவு பெற்றுக் கிளை அமைத்தது. மதுரை அருள்மிகு அங்கயற்கண்ணி (மீனாட்சியம்மை) திருக் கோயிலுள் சமய நூல்களை மட்டும் விற்றுவருதற்குக் கிளை அமைத்தது. திருநெல்வேலிச் சந்திப்பில் புத்தக விற்பனைக் கிளை யொன்று அமைத்தது.

1914இல் திருவாளர் வ. திருவரங்கம்பிள்ளை அவர்கள் கொழும்பில் இருந்தபோதே நூல்நிலையத்தின் இன்றியமையாமை யினைக் கருதித் தமக்கு நூல்கள் தம்பொருளில் வாங்கியதோடு, அடிகளார்க்கும் நூல்கள் வாங்கிக் கொடுத்தமை கண்டோம். அவ் எண்ணத்தின் விளைவே திருநெல்வேலியில் 1927இல் சிவஞானமா பாடிய ஆசிரியர் பொருநை தந்த சிவச்செல்வர் சிவஞான முனிவர் பெயரில் நூல்நிலையம் நடைபெறும் வாய்ப்புக் கிடைத்தது. அதற் கென 1966இல் அழகுரு தனிக்கட்டிடம் கட்டப்பெற்றுள்ளது. மறைமலையடிகளார் திருப்பெயரில் சென்னையில் மறைமலையடிகளார் நூல்நிலையமும், 1962இல் பல்லாவரத்தில் மறைமலையடிகளார் வாழ்ந்த மனையினை நடுவணரசு, மாநில அரசுகளிடம் பொருளுதவி பெற்று விலைக்கு வாங்கிக் கலைமன்றம் அமைத்து அங்கொரு நூல் நிலையமும் அமைக்கப்பெற்றுச் சிறப்புற நடைபெற்று வருவன வாகும்.

கழகத்தைத் தொடங்கும்போது கழக அமைச்சராய் இருந்த திருவாளர் மா. திரவியம்பிள்ளையவர்கள் 9—9—1924இல் இறை யடிசேர்ந்தார்கள். பின்பு அவர்கள் மக்கள் இருவர் அமைச்சர் களாகி விலகிவிட்டனர். அதன்பின் திருவாளர் வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் தனி அமைச்சராக இருந்து 28—4—1944இல் இறையடி சேர்ந்தார்கள்.

கழகத் தொடக்கத்தில் 'கூட்டுப்பங்கு நிறுவனம்' என்றால் என்ன என்று மக்களுக்குப் பொதுவாகத் தெரியாத காலம்.

அதனுல் கழகத்துக்குப் பங்கு சேர்ப்பதற்கு ஏற்பட்ட அலேக்கழிவு இவ்வளவு அவ்வளவு என்று கூற வொண்ணுதது. 4 தவணை களில் கொடுக்கவேண்டிய பங்குத்தொகையினைப் பெற முறையாக அறிவிப்புக்கள் அனுப்பியும் ஆயிரம் பங்குகட்கு மேல் பறிமுதல் செய்யலாயிற்று. 1944இல் என் அருமைத் தமையனர் பிரிவுக்குப் பின் அவற்றை விற்று முதற்கண் ஏற்படுத்திய மூலப்பொருள் ரூ. 50,000 நிறைவாக்கப்பெற்றது.

அதன்பின்பு இப்போது யான் கழகத்தின் ஆட்சியாளராக விருந்து நடத்திவருகின்றேன். இக் கழகத்தை மேலும் நடத்த முடியாத நிலைமை ஏற்படின் இதற்குரிய கடன் பொறுப்புக்களைக் கொடுத்துவிட்டு, எஞ்சியதொகை அறநிலையங்கட்கே உரியதாக்கப் படும். பங்காளிகட்கு உரிமை ஒன்றும் இருக்காது. இது நடை பெறுங்காறும் செலவுபோக மிச்ச ஊதியத்தில் நேர்பாதித் தொகை அறநிலையங்கட்கும், மீதித் தொகையில் நூற்றுக்கு ஆறு விழுக் காட்டுக்கு மேற்படாமல் பங்காளிகட்கும் அளிக்கப்படும். எஞ்சிய தொகை அறநிலையங்களையே சாரும். எனவே, நேர்பாதி ஆதாயத் திற்கே வருமானவரி கட்டப்பெறுதல் வேண்டும். பங்கு சேர்த்து ஒரு கூட்டுப்பங்கு நிறுவனம் பதிப்புத் துறைக்கென்று நிறுவி, சங்ககால இலக்கியம்முதல் தற்கால இலக்கியம்வரை ஆயிரத்து எழுநூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டும், உயர்ந்த கட்டடஞ் செய்து பரிசுகள் பெற்றும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் இதழை வரலாற்றுக்களஞ்சியம்போல் 54 ஆண்டுகள் தொடர்பாக நடத்தியும், பல மாநாடுகளை நடத்தி மலர்கள் வெளி யிட்டும், சங்ககால இலக்கியம் பிற்கால இலக்கியங்கள் சிற்சிலவற் றிற்கு மாநாடுகள் கூட்டி அறிஞர்களைக்கொண்டு சொற்பொழிவு ஆற்றச் செய்தும், அவற்றை நூல்வடிவில் வெளியிட்டுமுள்ளது.

மேலும் பயிற்சிமொழி, ஆட்சிமொழி, வழிபாட்டுமொழி, இந்தி எதிர்ப்பு இயக்கம், எல்லைப்பாதுகாப்பு, மழையே பெய்யாது பொய்த்த போது வழிபாடு செய்து நூல்கள் வெளியிட்டு மழைபெறவேண்டு தல், பலிவிலக்கல் ஆகிய இன்னபிற அரிய செயல்களையும் காலத் திறு செய்ய வேண்டியவற்றைச் செய்துவந்துள்ளது.

பள்ளிப்பாட நூல்களை எல்லாம் அரசு வெளியிட்டமையால் புத்தக விற்பனை போதுமானபடி இல்லாமல், மேலே கூறிய நூல் நிலையங்களை மேலும் வளர்த்தல், அறப்பணிகள் செய்தல், மறைமலை யடிகள் வாழ்ந்த கலைமன்றத்தை மேலும் சிறப்புற நடத்துதல் ஆகியவற்றைத் தொடர்ந்து செய்யமுடியாமல் இடர்ப்பாடு ஏற்பட் டுள்ளது.

பாடநூல் விற்பனைப்பெருக்கத்தால் ஊதியம் பெருகியபோது 1952இல் பங்காளிகட்கு ஒரு பங்குக்குக் காப்புநிதியிலிருந்து ரூபா 50,000 எடுத்து ஊதியமாக ஒரு பங்கு கூடுதல் கொடுத்து மூலப் பங்குத்தொகை ரூபா ஒரு நூறு ஆயிரம் ஆக்கப்பெற்றது.

1963இல் காப்புத்தொகையிலிருந்து மேலும் ஒரு நூருயிரம் எடுத்து ஒரு பங்குக்கு ஒரு பங்கு ஊதியமாகக் கொடுத்து மூலப் பங்குத் தொகை ரூபா இரண்டு நூருயிரம் ஆக்கப் பெற்றது. ஆகவே, தொடக்கததில் கூட்டுப்பங்கு நிறுவனம் தொடங்குமாறு ஊக்கி ரூ. 1000/- கொடுத்து நூறுபங்கு எடுத்த அருட்செல்வர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் தமக்கு 300 பங்குகள் கூடுதலாகக் கிடைக்கப்பெற்றுக் கழிபேருவகை அடைந்து ஆட்சியாளரைப் பெரிதும் போற்றி வந்தார்கள். அஃதேபோல் இப்போதைய தலைவரவர்களும் தமக்குக் கூடுதல் 300 பங்குகளைப் பெற்றனர்.

கழகமும் அறப்பணிகளும்

உலகில் வேறெந்தப் பதிப்பு நிறுவனமும் செய்யாத வகையில் கழகம் தொடக்க முதல் தனக்குக் கிடைக்கும் விற்பனை ஊதியத்தில் சரிபாதி அறப்பணிகளுக்கெனவே ஒதுக்கிவந்துள்ளது. எஞ்சியதிலும் பங்காளிகட்கு ஆறு விழுக்காடு மட்டுமே பங்கூதியமாக (Dividend) வழங்கப்பெற்று வருகிறது. எனவே ஊதியம் எவ்வளவு கிடைப்பினும் நூல் வெளியீட்டுப் பணிக்கும் அறப்பணிகளுக்குமே கழகம் பெருந்தொகை ஒதுக்கி வந்துள்ளது. வணிக நோக்கை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு புத்தக விற்பனை நிறுவனங்கள் அனைத்தும் செயல்பட்டு வருகையில் கழகம் ஒன்று மட்டுமே இத்தகைய அறக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகப் பாடுபட்டு வருகின்றது. இதனைத் தமிழ்மக்கள் நன்குணர வேண்டும். தமிழ்ப் பேராசிரியர்களும் அறிஞர்களும் கழக வெளியீடுகளைப் பெரிதும் வாங்கி ஊக்கப்படுத்துவதுடன் வாய்ப்பு நேரும்போது கழக நூல்களைப் பல்கலைக் கழக அளவில் பாடமாக வைத்துக் கழகம் இத்தகைய துறைகளில் மேலும் ஊக்கத்துடன் உழைக்கத் துணை நிற்கவேண்டும்.

தமிழும் சைவமும் இரு கண்களெனப் போற்றும் மக்கள் செய்யும் உதவிகளாலும் அவர்கள் அளிக்கும் ஊக்கத்தாலும் கழகம் மேலும் தொடர்ந்து வளர்ச்சிபெற அம்மை அம்பலவாணர் திருவருள் புரிவாராக.

வ. சுப்பையா.

தெ. பொ. மீ.யின் திரிபாராய்ச்சி

[ஞா. தேவநேயன்]

'தமிழிலக்கணத்தில் அயன்மொழி யமைப்புகள்' (Foreign Models in Tamil Grammar).

இறைவனருளால் இயன்ற அரைநூற்றுண்டாராய்ச்சியால், தமிழ் வேர்ச் சொற்பொருள் பெரும்பாலுங் காணப்பெற்று, தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி யென்னும் உண்மை வெள்ளிடைமலையாய் விளங்கியபின், அதை உயிர்முதல் வேர்ச் சொற்கள், உயிர்மெய்ம் முதல் வேர்ச் சொற்கள் என்னும் இரு வேறு கட்டுரைத் தொடர் களால் ஒருவாறு காட்டி, இறுதியில்; தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்கள் என்றும் தொகுதிச் சொற்கள் என்றும் இருவகைக் கட்டுரைத் தொடர்களால் நாட்டி வருங்கால், தமிழைக் காட்டிக் கொடுக்கும் வையாபுரிகளின் வேலை மீண்டும் வலுத்து அரசையும் பல்கலைக் கழகங்களையும் மயக்கி, தமிழ் முன்னேற்றம் சாணேறியபின் முழஞ்சறுக்கியிருப்பதனால், வீடு ஒரு புறத்தில் தீப்பற்றி வேகும்போது அதை யணைக்கும் வரை வேறொரு புறத்தில் புதிதாய் வேய்தலை நிறுத்தி வைத்தல் போன்று, என் மொழியாராய்ச்சிக் கட்டுரைத் தொடர் வெளியீட்டைக் குறுங்காலிக மாக நிறுத்திவிட்டு, டாக்டர் (Dr.) தெ. பொ. மீ.யின் 'தமிழிலக்கணத் தில் அயன்மொழியமைப்புகள்' என்னும் தீயநூல் தீந்தமிழ்க்கு பேலுந் திங்கு விளைத்தலைத் தடுத்தற் பொருட்டு, அதைச் சிறுசிறு பகுதியாகப் பகுத்துச் சீரிய வரலாற்றுமொழிநூன் முறையிற் செகுத்து, தவிடு பொடியாய்த் தகர்த்தெறிதலைக் குறிக்கோளாகக் கொண்டது இத் தொடர் கட்டுரை யென்று தெரிந்துகொள்க.

நன்னாட்டின் இலக்கணங் கூறுமிடத்து,

> "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல்குறும்பும் இல்லது நாடு." (குறள். 735)

என்றார் தென்னவர் தலைவர் திருவள்ளுவர். அவர் குறித்த முக்கேடுகளும் முற்றி முதிர்ந்தது முத்தமிழ் நாடு.

பல்குழு

முதற்கண் பிறநாடுகளிற் போன்றே பிறப்பொடு தொடர் பில்லாது இயங்கி வந்த அந்தணர் அரசர் வணிகர் வேளாளர்

என்னும் நால்வகைத் தலைமைத் தொழில் வகுப்புகளும், வேளாளரின் பதினெண் பக்கத் தொழில் வகுப்புகளும், பிற்காலத்தில் ஆரியச் சூழ்ச்சியால் பிறப்பொடு தொடர்பு படுத்தப்பட்டு, நூற்றுக் கணக்கான அகமணக் குலங்களாகப் பல்கிக் காற்றிற் பறக்கும் பூளைப் பஞ்சுபோற் பறக்கடிக்கப்பட்டுச் சிறிதும் ஒற்றுமையின்றிச் சின்னபின்னமாகச் சிதையுண்டு போயின. அதோடு கல்வியுரிமை யிழந்து, முதற்காலத்தில் நூற்றிற்கிருபத்தைவர் பாவலராயிருந்த தமிழ் இனம் நூற்றிற்குத் தொண்ணூற்றுவர் தற்குறிகளான தொகுதியாகவும் மாறிற்று.

பிறவிக் குலப் பிரிவினைக்குமேல் ஆரிய மத வேறுபாட்டாலும் தமிழர் ஒற்றுமை குலைந்தது. இன்று அரசியற் கட்சிகளால் எற்பட்டுள்ள ஒற்றுமைக்கேடு கொஞ்ச நஞ்சமன்று.

இந் நிலையில், தமிழைக் காத்தற்கும் வளர்த்தற்குமென்று தோன்றிய கழகங்களும் ஒன்றுபட்டவையல்ல. மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலித் தென்னிந்திய தமிழ்ச் சங்கம், தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழகப் புலவர் குழு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் முதலிய பல்வேறு கழகங்களும் மன்றங்களும் குழுக்களும், பழைய பாண்டியன் தமிழ்க் கழகம்போல் ஒரே அமைப்பகமாக ஒன்றினாலன்றித் தமிழுக்குப் பெருநன்மை செய்தல் இயலாது.

உய்பகை

பழங்காலப் பேதை மூவேந்தரும், ஆரியப் பூசாரியரின் வெண்ணிறத்தால் அவரை நிலத்தேவ ரென்றும், எடுப்பொலியால் அவரது இலக்கிய மொழியைத் தேவமொழியென்றும், முற்றும் நம்பிவிட்டதனால், வடமொழியை வழிபாட்டு மொழியாக உயர்த்தவும் தமிழைத் தாழ்த்தவும் நேர்ந்துவிட்டது. அக் கால வேந்தர் கண் கண்ட தெய்வமாதலாலும், "அரசன் எப்படி, குடிகள் அப்படி." என்பதனாலும், புலவர் பலரும் அவரைப் பின்பற்றி விட்டனர். இங்ஙனம் அரசரும் குடிகளும் ஆரிய வழிப்பட்டதற்கு, ஆரியப் பூசாரியர் சிவனியம் மாலியம் என்னும் இரு தமிழ் மதங்களையும் தழுவி அவற்றைத் தமவென்று ஏமாற்றியதே அடிப்படைக் கரணியம்.

ஆரியப் பூசாரியரின் வழியினர் பல அரசியற் பதவிகள் ஏற்றதையும், பாட்டும் கூத்தும் பயின்றதையும், பல தொழிலாளரையும் பிறப்பொடு தொடர்பு படுத்தியதையும், கல்வியைத் தமக்கே உரிமையாக்க முயன்றதையும், தமிழரைத் தாழ்த்தித் தம்மை உயர்த்தி வந்ததையும், நுண்மாண் நுழைமதித் தெய்வப் புலமைத்

திருவள்ளுவர் நோக்கி, ஆரியச் சூழ்ச்சியென்று கண்ட பின்னரே, தமிழர்க்கு விழிப்புணர்ச்சியூட்டத் திருக்குறளை இயற்றினர்.

அக்காலத்தில் உலக வரலாற்றறிவும் மொழிநூ லாராய்ச்சியும் இன்மையால், திருவள்ளுவர் மொழித்துறையில் ஆரியத்தை எதிர்க்கவில்லை. ஆயின், அவர் நூலால் தமிழாரிய வேறுபாட்டுணர்ச்சி தோன்றிவிட்டதனுலேயே, 2ஆம் நூற்றுண்டில் வையாபுரிப் பிள்ளை போன்ற கொண்டான் அல்லது கோடன் என்னும் குயவன், "ஆரியம் நன்று, தமிழ் தீது" எனவுரைத்து, பரிதிமாற் கலைஞன் போன்ற நக்கீரரால் சாவிக்கவும் பின்னர் உயிர்ப்பிக்கவும் பட்டான்.

11ஆம் நூற்றுண்டில் புத்தமித்திரன் மத வெறியாலும் ஆரியத்திற்கடிமையாலும், 18ஆம் நூற்றுண்டில் சுவாமிநாத தேசிகர் ஆரியத்திற்கடிமையாலும் தமிழைக் காட்டிக் கொடுக்க நேர்ந்தது.

இவ் விருபதாம் நூற்றுண்டில், உலக வரலாற்றறிவும் ஒப்பியல் மொழிநூ லாராய்ச்சியும் ஆங்கிலக் கல்வியும் பேச்சுரிமையெழுத்துரிமையும் மிகுந்திருப்பதால், தமிழைக் காட்டிக் கொடுக்கக் காரணமே யில்லை. ஆயினும், ஆங்கிலத்திற் பட்டக்கல்வியும் சட்டக் கல்வியும் பெற்றும், வேறெம் மொழியிலுமில்லாத பொருளிலக்கணங் கொண்ட தமிழிலக்கியங்கற்றும், வையாபுரிப் பிள்ளையும் பர். தெ. பொ. மீ.யும் தமிழை வடமொழி வழியதாகக் காட்டியதற்கு,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்" (குறள். 373)

என்பதே காரணமாதல் கூடும்.

பார்த்தமட்டில் தோன்ரு அல்லது தெளிவாய்த் தோன்ரு என்று பொருள்படும் "விழிப்பத் தோன்ரு" என்னும் எளிய தொல்காப்பியத் தொடருக்கு, தோன்றவே தோன்ரு (beyond ascertainment) என்று வையாபுரிப் பிள்ளை பொருள் கூறியதும்,

"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன." (மொழி. 49)

என்னும் போலி பற்றிய தொல்காப்பிய நூற்பாவை ஒருமை பன்மை எண் பற்றியதென்று பர். தெ. பொ. மீ. கூறியதும், மேற்குறித்த குறளாலேயே விளங்கும்.

ஏறத்தாழ மூவாயிரமென்று ஒருவகையிற் கணிக்கப்படும் உலக மொழிகளுக்குள், தமிழுக்குப் போன்று உட்பகை வேறெதற்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

கோல்குறும்பு

தொன்றுதொட்டுத் தமிழரிடை வதிந்து, தமிழரிடமிருந்தே ஊணுடையுறையுள் பெற்று, தமிழையே தாய்மொழியாகவும் வாழ் மொழியாகவுங் கொண்டு, தமிழராலேயே முன்னேறி, தமிழர் துணையாலேயே வாழ்ந்து வரும் தமிழ்நாட்டுப் பிராமணர், செய்ந்நன்றி கொன்று வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தாற் போன்று தமிழரை யெதிர்த்துப் பிறப்பிலிழிந்தவரென்று தாழ்த்தி, அறிவாராய்ச்சி மிக்க இவ் விருபதாம் நூற்றாண்டிலும் தமிழை முன்போல் வழிபாட்டு மொழியாகாதவாறு தடுத்து, அதன் தூய்மையை இயன்றவரை கெடுத்து, தமிழ்க் கலையறிவியல் மூல நூல்களையும் வடமொழி மொழிபெயர்ப்பு நூல்களின் வழியினமாகக் காட்டி வருகின்றனர்.

இதற்குமேல், வடநாட்டு இந்தியாரும் இன்னொரு கொல் குறும்பாகத் தோன்றியுள்ளனர். வடமொழியும் இந்தியும் ஒன்றுக்கொன்று துணைசெய்கின்றன. இவ்விரண்டையும் ஏற்கும் பேராயத்தமிழர் உட்பகையாக மாறியுள்ளனர்.

பர். தெ. பொ. மீ.

இவர் வையாபுரிப்பிள்ளையை அடியொற்றிச் செல்பவர்; மாந்தன் தோன்றியகத்தையும் தமிழன் பிறந்தகத்தையும் ஆரியம் தோன்றிய வகையையும் ஆராய்ந்தறியாதவர்; தமிழின் குமரிநாட்டுத்தோற்றத்தை ஒப்புக் கொள்ளாதவர். தமிழரின் முன்னோர் நண்ணிலக்கடற்கரை நாடுகளினின்று வந்தவரென்று வாயினாற் சொல்லாவிடினும் உள்ளத்தில் ஒப்புக்கொள்பவர்; தமிழ் வேர்ச்சொற்களை அறியாதவர்; அதனால் ஆரியத்தை முதன்மையாகவும் தமிழை வழிநிலையாகவும் வைத்து மொழியிலக்கிய வரலாறுகள் எழுதி வருபவர் (History of the Tamil Language, A History of Tamil Literature), இவர் 'தமிழ்க்கலைக் களஞ்சியத்தில்' சில கட்டுரைகளும் வரைந்துள்ளார் அடிப்படை தவறானபடியால் முடிபுகளும் பெரும்பாலும் தவறாகவே யிருக்கும். இவர் இறுதியாக எழுதி 1974-இல் வெளியிட்ட ஆங்கில நூல், தமிழிலக்கணத்தில் அயன்மொழியமைப்புகள் என்று பொருள்படும். 'Foreing Models in Tamil Grammar' என்னும் தலைப்புக்கொண்டது. "எகர ஒகரத் தியற்கையு மற்றே" (நூன்மரபு, 16) என்னும் தொல்காப்

பிய நூற்பா இவர் முடிபிற்குப் பெருந்துணை செய்வதாகத் தோன்றுகின்றது.

தொல்காப்பியம் இயற்றமிழிலக்கணம் முழுவதையும் ஓரளவு விரிவாகக் கூறும் ஒரே பண்டைநூலாயினும், இடையிடைப் பல படுதுழிகளையும் கவர்வழிகளையும் கொண்டிருப்பதால், தமிழ் வேர்ச்சொல்லாராய்ச்சியும் தமிழன் பிறந்தக ஆராய்ச்சியும் இல்லாதார் எத்துணைத் தென்மொழியும் வடமொழியுங் கற்றிருப்பினும், தொல்காப்பியத்தை மொழிவரலாற்றிற்குப் பயன்படுத்த இயலாது.

இந்நூலை இவரைக்கொண்டு எழுதுவித்தது, கேரளப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த V. I. சுப்பிரமணியம், கன்னடப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த R. C. இரேமத்து (Hiremath), திருப்பதிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த K மகாதேவ சாத்திரி (Sastri) ஆகிய மூவர்குழு. இம் மூவருள் முதல்வர் தமிழைத் தலைகீழாகப் படித்தவர்; ஏனையிருவர் தமிழறியாத பெருமாளர்.

இந்நூல், புத்தமித்திரன் இயற்றிய வீரசோழியம், சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றிய பிரயோக விவேகம், சுவாமிநாத தேசிகர் இயற்றிய இலக்கணக் கொத்து ஆகிய மூன்று தள்ளுபடி நூல்களையும் விழுமிய அளவை நூலாகக் கொண்டு, உண்மைக்கு மாறானவும் தமிழுக்குக் கேடானவுமான முடிபுகளைக் கூறுவது.

தமிழிலக்கணம் வடமொழி வழியதென்று திரித்துக் கூறுவதால், நல்லிசைப் புலவராலும் அடிப்பட்ட சான்றோராலும் உண்மைத் தமிழராலும் உயரிய இலக்கண நூலாராலும் உதவாக்கடையென்று ஒதுக்கப்பட்ட கழிசடை நூல்களையே, இந் நூலாசிரியர் கருவி நூல்களாகத் தேடியெடுத்துக்கொண்டதனால், இவரது மனப்பான்மை எவருக்குந் தெற்றென விளங்கும்.

இவரது இத்திருப்பணிக்கு 40,000 (நாற்பதினாயிரம்) உருபா உதவியது தி. மு. க அரசே. இங்ஙனம் தமிழனே தமிழனிடம் பெற்ற தமிழ்ப் பணத்தைக் கொண்டு தமிழ் நிலத்திலேயே தமிழுக்குக் கேடான ஒரு போலிப் புன்னூலை யுருவாக்கித் தமிழ்ப்புலவர் முன்பே உலகிடைப் பரப்பியிருப்பதை, உள்ளுந்தொறும் உள்ளஞ் சுடும்.

சமற்கிருத அடிப்படையில் தமிழைக் கற்றுத் தமிழைப் பிறழவுணர்ந்த இவரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒரு தமிழதிகாரியாக அமர்த்திற்று. அதனால் தமிழுக்கு விளைந்த தீங்கு கொஞ்சநஞ்சமன்று.

முதலாவது, அப் பல்கலைக்கழகத்தில் என்னால் தொகுக்கப் படவிருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப்பணி தடும் புண்டது. அதனால் வெளியேற்றப்பட்டேன். என்னொடு தமிழும் வெளியேறிற்று. அவ்வகர முதலியை பர். தெ. பொ. மீ. யும் தொகுத்தாரல்லர். அவரால் தொகுக்கவும் இயலாது.

இரண்டாவது, கால்டுவெலார் காலம்வரை கையாளப்பட்டு வந்த கொடிவழியியல் மொழிநூல் விலக்கப்பட்டு, அறிவியலல்லாத அமெரிக்க வண்ணனை மொழிநூல் புகுத்தப்பட்டது. கொடிவழி யியல் மொழிநூலால் ஆரிய ஏமாற்றுக் குட்டு வெளியாகிவிடும். ஆதலாற் பிராமணர் அதை விரும்புவதில்லை. அதனால், அவர்வழிச் செல்லும் தெ. பொ. மீ.யும் அதைப் புறக்கணித்துவிட்டார்.

மூன்றாவது கிளைமொழியியல் என்னும் பெயரால், செந்தமிழ் மரபை மீறிக் கொடுந்தமிழினுங் கேடான கடுங்கொச்சைச் சொற் களும் உயர்ந்தோர் வழக்கிற் கொப்பாகத் தொகுக்கப்படுகின்றன. இது, கீழோர் பழக்க வழக்கங்களையும் மேலோர் மேற்கொள்ள வேண்டும் என்பது போலாகின்றது.

நான்காவது, உலகவரலாறு (World History), ஒப்பியன் மொழிநூல் (Comparative Philology), குமுகாயப்பண்பாட்டு மாந்த னூல் (Social and Cultural Anthropology) என்னும் உலகந்தழி இய மூவறிவியல்களின் வளர்ச்சி குன்றுகின்றது.

ஐந்தாவது, ஆரியம் என்னும் இலக்கியப் பிராமணியம் வலுத்து வருகின்றது. இதன் விளைவாக, அண்மையில், பதுமா சுப்பிரமணியம் என்னும் பிராமண நடிகையார், தமிழருக்கு நடக் கலையே தெரியாதென்றும், காசுமீரப் பரத முனிவரின் பரத சாத்தி ரத்தைக் கற்றே அக்கலையை அறிந்தனரென்றும், ஓர் இடுநூல் இட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் பண்டாரகர்ப்பட்டம் (Doctorate) பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இது, மீன் குஞ்சே தாய்மீனை நீந்தப் பயிற்றியது என்னுங் கூற்றையொத்தது. இப் பட்டவளிப்பு, அ. ம. பல்கலைக் கழக நடப்பேராசிரியரை மட்டு மன்றித் தமிழ்ப் பேராசிரியரையும் ஆட்சிக் குழுவையும் தலைமை யதிகாரிகளையும் தாக்குகின்றது. இதனால், முத்தமிழ் என்னும் பெயரே முழுப்பொருளையும் இழக்கின்றது. அரசவயவர் அண்ணா மலைச் செட்டியார் அவர்களின் தமிழிசைப் போராட்டம் முற்றும் பயனற்றதாகின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச் சிக்குத் தோன்றியதென்பதும் தவறுகின்றது. உலகத் தமிழ்ப் புலவர் அனைவரும் அடிமடையரும் அஃறிணையும் ஆகின்றனர்.

தமிழ் குமரி நாட்டில் தோன்றிய உலக முதற்ருய் உயர்தனிச் செம்மொழி யென்றும், கி. மு. 10,000 ஆண்டுகட்கு முற்பட்ட தலைக் கழகத்திலேயே முத்தமிழ் தோன்றிவிட்ட தென்றும், தமிழின் 4ஆம் மடித்திரிபான மேலையாரியத்தின் கிரேக்கப் பிரிவையொத்த ஒரு மொழியைப் பேசிக்கொண்டு இலக்கியமும் எழுத்துமின்றி முல்லை நாகரிக நிலையில் கி. மு. 1500 போல் இந்தியாவிற்குட் புகுந்து தம் மொழி வழக்கிழந்து, வேத மொழியையும் அதற்குப் பிற்பட்ட சமற்கிருத மொழியையும் இலக்கிய மொழியாகவே கொண்டு, இந்திய மொழிகளையே பேசிவரும் ஆரிய வழியினர் எல்லா வகையிலும் தமிழராலேயே நாகரிகமடைந்து சூழ்ச்சியாகத் தம்மை யுயர்த்திக்கொண்டு, தமிழ் மூல நூல்களையெல்லாம் வட மொழியில் மொழிபெயர்த்துக்கொண்டபின் அழித்துவிட்டனர் என்பதை, அறிந்து அம்மையார்க்குக் கொடுத்த பட்டத்தை அ. ம. ப. க. மீட்டுக்கொள்ளும் காலம் அண்மையிலிருக்கின்றது என்பதை, இன்று குதித்துக் கூத்தாடிக் குலவிக் கொண்டாடிக் கொட்டமடிக்கும் தமிழ்ப் பகைவர் அறிவாராக.

அடுத்த இதழில், தெ. பொ. மீ. நூற் கண்டனம் தொடங்கும். ஆயின், என் கொள்கையை ஒப்புக்கொள்ளின் இம் மறுப்பு நிறுத்தப்படும்.

குறிப்பு: தனிப்பட்ட முறையில் பர். தெ. பொ. மீ. யொடு எனக்கு எட்டுணையும் பகைமையில்லை. அவரை என் உண்மை நண்பர் எனவும் பின்வாங்கேன். ஆயின், அவருக்கும் எனக்கும் பொதுவான தாயைப் பழிப்பதும் முன்னோரைத் தகவிலர் என்பதும் போன்ற கொள்கையையும் கூற்றையுமே வன்மையாய் எதிர்க் கின்றேன்.

மூவாயிரவாண்டு மறையுண்டு கிடந்த முத்தமிழ் மாண்பு மீண்டும் உலகிற்கு வெளிப்படவிருக்கின்றது. இது இறைவன் ஏற்பாடு. இதை எவருந் தடுக்க வியலாது. ஆதலால், வையாபுரிப் பிள்ளைபோல் வசைபெற வாழாது, இனிமேலாயினும் திருந்தி உண்மை விளம்பியென்று பெயரெடுக்க.

மேலையறிஞர் இற்றை அறிவியல்களுக்கன்றிப் பண்டு தோன்றிய மொழிகட்கு அதிகாரிகளாகார் என்பதைத் தெற்றெண வுணர்க.

———

செந்தமிழ்ப் பாவலன்

[புலவர் ப. எழில்வாணன் இலக். இ.]

நல்ல மனதுடன் பாடிடுவான்;—பிறர்
நன்மை விளக்கிப் புகழ்ந்திடுவான்!
உள்ளக் கவலையை மறைத்திடுவான்,—நாளும்
உண்மை நிலையை உரைத்திடுவான்!

வயலின் பண்பை விளக்கிடுவான்;—உழவர்
வளத்தைப் பெருக்கிட ஊக்கிடுவான்!
செயலின் தேவையை உணர்த்திடுவான்;—வேலை
செய்யா வீணரைத் திருத்திடுவான்!

உழைப்பின் பயனைக் காட்டிடுவான்;—பாவியம்
உலகம் புகழ்ந்திட வடித்திடுவான்!
களைப்பு சோர்வை நீக்கிடுவான்;—பாவில்
கனிச்சுவை நிறைய ஆக்கிடுவான்!

உணவினைப் பெறவழி கூறிடுவான்;—தான்
உணவை யிழந்து வாடிடுவான்!
கனவினில் காண்பதைப் பாடிடுவான்;—ஒருநாள்
கனவே நினைவெனச் சாற்றிடுவான்!

பிறர்நலம் பேணிட முயன்றிடுவான்;—முடிவில்
பிறரால் துயரினை அடைந்திடுவான்!
திறன்பல இருந்தும் தளர்ந்திடுவான்;—அவன்
தீயதை ஒழித்தும் தாழ்ந்திடுவான்!

ஏழையின் பசியைப் போக்கிடுவான்;—கையில்
இருப்பதை உதவிடக் கொடுத்திடுவான்!
நாளை அவனே அலைந்திடுவான்;—பசியால்
நலிந்து வீழ்ந்தே மாய்ந்திடுவான்!

மறைந்த பின்பே புகழ்ந்திடுவர்;—மாந்தர்
மாய உலகை அறிந்திடுவர்!
குறைந்த வாழ்வெனச் சொல்லிடுவர்;—அவன்
கொள்கைப் பாடலைப் பாடிடுவர்!

அவனே செந்தமிழ்ப் பாவலனும்;—நல்ல
அமிழ்துக் கருத்தைத் தருபவனும்!
இவனே எனப்பலர் வியப்பாராம்;!—அவனை
இறந்த பின்பே தொழுவாராம்!

———

மனோன்மணீயப் பதிப்பும் மாண்பமை பணிகளும்

[புலவர் பொன். முனிபப்பன், கூவனூர்.]

முத்தமிழின் மூன்றும் தமிழாம் நலமுறு நாடகத் தமிழுக்கு இலக்கியம் இல்லாத குறையை விலக்க எழுந்த நூல் அற்றைக் குமரி நிலத்தின் பெற்றியுணர்ந்த ஆற்றல்சால் அறிஞரால் இயற்றப்பட்ட அருந்தமிழ் நூல். இந் நாட்டின் வரலாறு, தென் குட்டினின்றும்—குன்ரு நாகரிகம் குலையாப் பண்பு கொண்டு வாழ்ந்த குமரிக் கண்டத்தினின்றும் தொடங்கப்படாதவரை தலை கீழ் வரலாறே என்று அன்றே ஆய்ந்துரைத்த [1]வரலாற்று ஆய்வு வேந்தரால் வழங்கப்பட்ட நூல்.

மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதல் மாண்புடைய பல நூல்கள் மடிந்த பின்னுல், இடிந்திருந்த தமிழர்க்கு எழுச்சியூட்டிய இன்றமிழ் நூல். தமிழ்த்தாய் வாழ்த்து என்னும் அமிழ்தனைய கலிப்பாப் பாடலால் இமிழ் கடல் உலகில் இணையிலாத் தமிழின் புனைவிலாப் பெருமையைப் புலப்படுத்திய நூல்.

தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்னும் முப்பெரு மலர்ச்சிக்காக இப் புவியில் உழைத்த இனிய பேராசிரியர் திரு. பெ. சுந்தரம் பிள்ளை அவர்களால் 1891இல் இயற்றப்பட்ட மனோன்மணீயமே மேலே யுரைக்கப்பட்ட பெற்றிகளை யெல்லாம் பெற்று மிளிரும் பெருமைமிக்க நூல். இந் நூலுக்கு அன்று தொட்டு இன்றுவரை பல பதிப்புகள் வந்துள்ளன.

என்ருலும், ‘சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்’ மனோன் மணீயத்தையும் அதன் ஆசிரியரையும் போற்றிவரும் முறை யாவ ராலும் பாராட்டத்தக்கதும், அப் பதிப்பினை வாங்கி அப் பணிக்கு ஒத்துழைக்கத்தக்க சிறப்புடையதுமாகும்.

எவ்வாறெனில், மனோன்மணீயம் போன்ற சிறந்த நாடக இலக்கியங்கள் தொடர்ந்து படைக்கப்பட வேண்டும் என்பதற்காக ஒரு நாடகப் போட்டி உருவாக்கி அதில் வெற்றி பெற்ற ‘அனிச்ச அடி’ என்னும் நாடகத்தைப் படைத்த புலவருக்கு ஆயிரம் பொற் காசுகள் பரிசும் வழங்கியுள்ளது கழகம்.

---

1. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு, ‘இலண்டன் வரலாற்று ஆய்வுக் கழகம்’ தந்த பட்டம் F.R.H.S. ஆசிய ஆய்வுக் கழகம் தந்த பட்டம் M.R.H.S.

மேலும், 'அனிச்ச அடி' நூல் விற்பனை [2] ஊதியத்தில் வரும் தொகையில் பத்துப் பங்கினை மனோன்மணீயம் படைத்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் நினைவைப் போற்றும் முறையில் அவர் படிமம் அமைக்கத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது கழகம்.

இவ்வாறு நூல் வகையில் மனோன்மணீயத்தைப் பின்பற்றிப் பல நூல்கள் உருவாகப் போட்டி அமைத்ததோடு ஆசிரியரைக் கொண்டாடும் முறையில் படிமத் திட்டம் அமைத்துச் செயலாற்றி வருவதையும் நோக்குகையில் கழகம் எச் செயலையும் திருத்தமாகத் திட்டமிட்டு, வருத்தமுற உழைத்து, திருவெல்லாம் திகழப் பாடு படும்—பணியாற்றும் பாங்கு புலனாகிறது.

இற்றைக்குத் தமிழ்ப் புலவர்களையும், அவர்கள் படைத்த நூல்களையும் பிறவற்றையும் முழுமையாக அறிய விரும்பின் அதற்குக் கழகத்தின் அரவணைப்பில் சென்னையில் சிறந்து விளங்கும் மறைமலையடிகளார் நூல்நிலையம் ஒன்றே உற்ற துணை என்பது கற்றவர்க்கும், அதனைக் கண்டவர்க்கும், அதுபற்றிக் கேட்டவர்க்கும் ஈட்டிய செல்வம்போல் இனிது புலனாகும்.

எனவே, நூலோடு ஆசிரியரையும் போற்றி, அப் பணி அனைவருக்கும் பயன்படும் முறையில் நூலகத்தையும் ஒரு பதிப்பகம் நடத்தி வரும் பாங்கை உலகில் வேறெங்கும் காண்பதற்கில்லை. இக் கழகம் பதிப்புத் துறையில் இந் நாட்டிற்கே வழி காட்டியாய், மேலை நாட்டுப் பதிப்புகளுக்கு ஈடு செலுத்தும் முறையில் இலங்குகிறது என்பதைப் பாராட்டாதவர் இல்லை.

இதற்குச் சான்று கூறும் முறையில் மாநில, நடுவண் அரசுகளின் பல்வேறு பாராட்டுகளும், பரிசுகளும், சான்றிதழ்களும் கிடைத்துள்ளன. இப் பணிகளை யெல்லாம் செப்பமுற ஆற்றி வரும் ஒப்பில்லாக் கழக ஆட்சியாளர் அவர்களையும் யாவரும் தப்பாது போற்றிச் சிறப்பித்து உள்ளனர்.

இப் பாராட்டும் பரிசும் ஊக்கம் தரும் உயரிய பாங்குடையதே. ஆயின், ஆற்றும் அரும்பணிகள் யாவும் மேன்மேலும் தொடரவும், இடரின்றித் தடையுடைத்து நடை பெறவும் வேண்டியதே முதன்மையானது. அதற்குக் கழகப் பதிப்புகளை யாவரும் வாங்கிப் போற்றுவதொன்றே ஏற்ற செயலாகும். இவ் வாங்கும் பணியே தமிழ்—பதிப்பகம்—படிப்போர் ஆகிய முக் கூற்றின் முழுமை வளர்ச்சிக்கு முதலீடு ஆகும்.

---

2. ஊதியம் என்ற சொல் இன்று 'சம்பளம்' என்ற பொருளில் பிழையாக வழங்கப்படுகிறது. முதலீடு வைத்து அதனைக் கொண்டு வாணிபம் புரிவதால் (வரும் வருவாயின் பெருக்கமே) ஊதிப் பெருப்பதே ஊதியமாகும் (Profit).

அறிஞர்கள், அரசு, அதிகாரிகள், ஆசிரியர்கள் போன்ற யாவரும் இதில் கருத்துச் செலுத்துதல் கடமையாகும். அழிந்தன போக, இன்று இருக்கும் அருந்தமிழ் இலக்கிய இலக்கண நூல் களோடு பிறவற்றை யெல்லாம் அருமையாய்ப் பதிப்பித்துப் பேணிப் பேழையில் தரும் பெருமை சான்ற நிறுவனத்தைப் பெற்ற தமிழ்மக்கள் அதனை நன்கு பயன்படுத்தி வியன் சான்ற விளைவு களைப் பெறல் வேண்டும்.

ஆயின், பெற்ற, பெற்றுக்கொண்டிருக்கின்ற விளைவுகள் நிறைவு தரத் தக்கனவாயில்லை. இதற்கான ஏதுக்கள் யாவையென நோக்குகையில் ஒரு சில புலப்படுகின்றன. எடுத்துக்காட்டாய் மனோன்மணீயப் பதிப்பையும், அதனை மாணவரும் மற்றோரும் பயன்படுத்த வியலா மாறுபட்ட கூறுகளையும் மதிப்பிடுவோம்.

கல்லூரிப் பாடமாக இந்நூல் வைக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. ஆயின் கல்லூரி மாணவர்கள் கழகப் பதிப்பை விரும் பினும் வாங்க இயலாத சூழல் கல்லூரிகளில் நிகழ்வதாக அறிகி றோம். தங்கள் கல்லூரிப் பேராசிரியர்கள் வெளியிட்ட, பதிப்பித்த நூல்களையே வாங்குதல் வேண்டுமென்ற கட்டளை கூறப்பட்டுள்ள செய்திகள் நம் காதுகளுக்கு எட்டுகின்றன.

பேராசிரியர்களிடம் தமிழ்நாடு எதிர்நோக்குவது பதிப்புப் பணிகளையல்ல. அறிவுச் சிறப்பும், புலமை நலமும் ஆய்வுப் பாங்கும் பெற்று மறைந்துள்ள உண்மைகளை மலர்த்துவதும், தமிழ்மொழியில் இல்லாததைத் தருவதுமான பணிகளையே.

திட்பநுட்பஞ் செறிந்தவற்றை யாவரும் தெளிவாக அறியும் வண்ணம் தெரிவிப்பதுமான பணிகளை விட்டு, பதிப்பிக்கும் பணி களைப் புரிந்து, பணம் ஈட்டுவதொன்றிலேயே நோட்டங் கொண் டிருப்பது பேராசிரியரின் தகுதிக்குரிய பணியுமன்று, அது பாராட்டத் தக்கதுமன்று.

கழகப் பதிப்பு நீங்கலாக மனோன்மணீயம் எட்டுப் பதிப்புகளைப் பெற்றுள்ள ஒன்றே மேற்குறித்த கூற்றிற்குத் தக்க சான்றாகும். இப் பதிப்புகளின் நோக்கம் மாணவர்களிடம் விற்பனை செய்வ தற்கேயன்றி, செம்மையான பதிப்பு வேண்டும் என்றோ, இலக்கியப் பணி புரிய வேண்டுமென்றோ எண்ணியன்று.

கழகப் பதிப்பையும் பிற பதிப்புகளையும் ஒப்பிட்டு நோக்கின் இவ் வுண்மை வெண்மை மலையென விளங்கித் தோன்றும். ஓர் இலக்கியத்தை எவரும் பதிப்பிக்கலாம். ஆயின், அது முன்பு பதிப்பித்ததைவிடத் திருத்தமாகவும் செப்பமாகவும் இருந்தாலே பாராட்டவும் பயன்படுத்தவும் தக்கது.

அவ்வாறின்றித் தரம் குறைந்த பதிப்புகளை வெளியிடுவது வேண்டாத வேலை மட்டுமன்று, தரமுள்ள பதிப்பால் விளையும் நன்மைகளையும் கெடுக்கக் கூடியது. 'தரக்குறைவு என்பது தவறு, விலை குறைத்து எம் பதிப்பை வெளியிடுகிறோம்' எனக் கூறச் சிலர் முற்படலாம்.

ஆயின், நயமான பொருளுக்கு நல்ல விலையும், நயம் குறைந்த அல்லது கலப்படமான பொருளுக்கு மலிவுவிலையும், இருப்பதனை இதனோடு இணைத்துப் பார்த்திடுக. புற்றீசல்கள் போல் வந்த மலிவுப் பதிப்புப் பணிகள் எல்லாம் இன்று என்னாயின ?

புற்றீசல்களின் வாழ்வே அவற்றுக்குக் கிட்டும் என்பதைக் காலம் நமக்கு உணர்த்தியுள்ளது. இலக்கியம் என்றும் அழியாது இருக்க வேண்டியது. அதனைத் திருத்தமாகவும் செப்பமாகவும்—தரமாகவும் வெளியிடுவதொன்றே இலக்கியப் பணி—தமிழ்ப்பணி—அறிவுப் பணியாகும்.

பிறவெல்லாம் தன்னலப் பொருளீட்டும் பணியேயன்றித் தகவுடையதன்று 'கழகம் பொருளீட்டவில்லையா ?' எனக் கழறுவர் சிலர், பொருளீட்டுகிறது. ஆயின், அஃது எவருடைய தனி நலத்திற்குமன்று.

பொருளீட்டாமல் எத்தகைய தரமிக்க பணிகளையும் தொடர்ந்து நிலையாகச் செய்தல் இயலாது. கழகம் ஒரு கூட்டுப்பங்கு நிறுவனமே என்பதையும் அது தன் விற்பனை ஊதியத்தில் பல்வேறு அறப்பணிகளைப் புரிந்து வருகிறது என்பதையும் எண்ணிப் பார்ப்போர் இதற்கு எத்துணை ஒத்துழைப்புக் கொடுத்தல் வேண்டும் என்பதை உணர்வர்.

மேலும், மனோன்மணீய நூலாசிரியரின் நினைவுக்குத் தக்க திட்டம் வகுத்துச் செயல்பட்டு வரும் கழகப் பதிப்பினை வாங்குதல் அத் திட்டத்திற்கு, நூலாசிரியருக்கு ஒவ்வொருவரும் ஆற்றும் நன்றிச் செயலாகும் என்பதை உளம் ஒன்றிக் காண்க. அரசும், அதிகாரிகளும், ஆசிரியர்களும் இதில் அக்கறை கொண்டு செயலாற்றின் அது நலங்கூர் நாடகத் தமிழுக்குச் செய்யும் நற்பணியாகும்.

அந் நற்பணியைப் பொற்புற நாட்டுக! நலிவுடைப் பதிப்புகளை ஓட்டுக! நன்மைகளை ஈட்டுக! செப்பமிக்கவற்றையே போற்றும் செந்தமிழர் நாம் என்பதைக் காட்டுக!

———

தீர்ப்பாளர் மகராசனார் திருவள்ளுவர்

[ஞா. தேவநேயன்]

(முன் இதழ் உ௬௫ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்குறட் சிறப்பியல்கள்

திருவள்ளுவரின் சிறப்பியல்களைக் கூறியது போன்றே, திருக்குறளின் சிறப்பியல்கள் சிலவற்றையும் சிறப்பாகக் கண்டு கூறியுள்ளார் திரு. மகராசனார். இவற்றுட் சில ஏனையோராலும் ஏற்கெனவே கூறப்பட்டிருப்பினும், அவற்றைத் தெளிவாக விளக்கியும் திறம்பட வலியுறுத்தியும் கூறியிருப்பது புதுச்சிறப்பாகும்.

1. ஒப்புயர்வற்றது

பல மதங்கட்குரிய மறைநூல்கள் அவ்வம் மதத்தார்க்குத் தலை சிறந்தனவேனும், நாடு இன குல மத கட்சிச் சார்பற்று மன்பதை முழுவதற்கும் பொதுவான உயரிய நாற்பொருண் மறை நூல் திருக்குறளே யென்பது, எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றே.

ஆய்ந்து பாராது ஆரியத்தையேற்றுத் தம்மையும் தம் குடிகளையும் அடிமைப்படுத்தி,

"ஆய்ந்தாய்ந்து கொள்ளா தான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்" (792)

என்னும் குறட் கிலக்கியமாகிய மூவேந்தரின் பேதைமைச் செயலால், வேதம் தேவமொழி யென்றும் வேதியன் நிலத்தேவன் என்றும் வழங்கிவரும் (அல்லது வந்த) கூற்று, கூற்றுகித் தமிழரின் மதியைக் கொன்றுவிட்டதனுல்,

"அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனுர்
ஓதவழுக் கற்ற துலகு."

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா
நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—
நான்மறையை

வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி."

"சாற்றிய பல்கலையுந் தப்பா அருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பார்
எப்பா வலரினு மில்."

"ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு."

"ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமே லயன்."

"எப்பொருளும் யாரும் இயல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்."

"ஏதமில் வள்ளுவர் இன்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொரு ளெல்லாம்—உரைத்ததனால்
தாதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன."

"இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்—மன்பதைகட்
குள்ள அரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்."

"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழா லுரைசெய்தார்—ஆதலால்
உள்ளுந ருள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு."

"ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும் முதனென்குஞ் சாலும்—அருமறைகள்
ஐந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்."

"சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா."

என்னும் பதினெரு வெண்பாக்கள், கடைக்கழகப் புலவர் பதினெருவர் பெயரில் திருவள்ளுவ வெண்பா மாலையிற் காணப் படுகின்றன. அப் பதினெருவரும் உண்மையாய் அவற்றைப் பாடியிருப்பினும், அவர் ஆரிய வேதத்தைக் கற்ருே கேட்டோ அறிந்தவராகார். அறிந்தவராயின் அங்ஙனம் பாடியிரார். ஏனெனின், பல்வகைச் சிறுதெய்வ வழுத்துத் திரட்டாகிய வேதத் திற்கும் முழுமுதற் கடவுள் வணக்கத்தொடு கூடிய நான்மாண் பொருள் நூற்கும், ஒப்பு நோக்கற்குரிய பொருள்தொடர்பு ஒன்று மில்லை.

இனி, இதற்கு நேர்மாருக,

"தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனு அறமுதலா அந்நான்கும்—ஏனேர்க்(கு)
ஊழி னுரைத்தார்க்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னுற்று மற்று."

என்று **நக்கீரர்** பெயரிலும்,

"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானேர் பேதை யவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்."

என்று **மாமூலனர்** பெயரிலும்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி."

என்று **கல்லாடர்** பெயரிலும்,

"பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்."

என்று **அரிசில்கிழார்** பெயரிலும்,

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்."

என்று நத்தத்தனுர் பெயரிலும்,

"உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனுர்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினு மில்."

என்று முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் பெயரிலும்,

"அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்."

என்று தொடித்தலை விழுத்தண்டினுர் பெயரிலும்,

"எல்லாப் பொருளும் இதன்பா லுளவிதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனுர்
சுரந்தபா வையத் துணை."

என்று மதுரைத் தமிழ்நாகனுர் பெயரிலும்,

"அறமுதல் நான்கும் அகலிடத்தோ ரெல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனுர் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி."

என்று கோவூர்கிழார் பெயரிலும்,

"இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியில் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனுர்
பாடின ரின்குறள்வெண் பா."

என்று இழிகட் பெருங்கண்ணனுர் பெயரிலும்,

"உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிருள் தள்ளுதலால்—வள்ளுவனுர்

வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.''

என்று குலபதி நாபனார் பெயரிலும்,

'பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.''

என்று தேனிக் குடிக்கீரனார் பெயரிலும்,

''அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.''

என்று கோடிஞாழன் மாணிபூதனார் பெயரிலும்,

''ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவர் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.''

என்று கோதமனார் பெயரிலும், பதினாறு வெண்பாக்கள், திருக்குறளின் தனிநிலையையும் முதன்மையையும் பொதுமையையும் தலைமையையும் திட்டவட்டமாய்த் தெரிவிப்பனவாகத் திருவள்ளுவ வெண்பா மாலையிலேயே இருத்தல் காண்க.

இனி,

'ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.''

''செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே ஆராயி னேனை
இதற்குரிய ரல்லா தாரில்.''

என்று, முற்றும் உரிமையருமாகாது அடிமையருமாகாது நடுநிலையாளர்போல் நடித்த நெஞ்சுரமிலிகள் இருவர் பாக்களும் திருவள்ளுவ வெண்பா மாலையில் உள.

2. ஆரியத் தொடர்பற்றது

துறவறவியல் வீடு நோக்கிய தாதலாலும்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்" (46) என்னும் குறட்படி இல்லறத் தாலும் வீடு பெறலாம் என்பது தமிழக் கொள்கையாதலாலும், சிவனடியார் அறுபத்து மூவருட் பெரும்பாலார் இல்லறத்தில் நின்றே வீடு பெற்றதாகப் பெரிய புராணங் கூறுவதாலும், இன்பத் துப்பாலும் திருக்கோவைபோல் அல்லகூறியாய் (Allegory) உட் கருத்து விளக்கம் பெற இடமுண்மையாலும், திருக்குறள் முப்பாலில் நாற்பொருளுங் கூறும் நிறைநூல் என்பதே உண்மையாம்.

இனி, பொய்யுடை யாரியர் சொல்வன்மையினாலும் மெய் யுடைத் தமிழர் சொலமாட்டாமையாலும், நாற்பொருட் பாகுபாடே ஆரியர் வகுத்ததென்றும், அகம் புறம் என்பதே தமிழர் பொருட் பாகுபாடென்றும், இன்றும் 'தமிழ்ப் புலவர்' பலர் கருதிக்கொண் டுள்ளனர். அகம் புறம் என்பது பொருளிலக்கணப் பாகுபாடே யன்றி, அறநூற்பாகுபாடன்று; ஒவ்வொரு நூலிலும் பொருட் கேற்பப் பாகுபாடு வேறுபடும்.

எ - டு: நூல்வகை		பாகுபாடு
பொருளிலக்கணம்	—	அகம், புறம்.
அறநூல்	—	அறம், பொருள், இன்பம், வீடு.
ஏரணம்	—	பொருள், குணம், கருமம், பொதுமை, சிறப்பு, ஒற்றுமை, இன்மை.

கொண்முடிபு (சித்தாந்தம்)—கடவுள், கட்டுணி, கட்டு (பதிபசுபாசம்), இனி, இலக்கண நூற்குள்ளேயே, உயிர், மெய், உயிர்மெய் (பிராணி, animal) என்பது எழுத்ததிகாரப் பாகுபாடு; பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பதும், உயர் திணை, அஃறிணை என்பதும், சொல்லதிகாரப் பாகுபாடு. நாற்பொருளுள் இம்மைக்குரிய முதன் மூன்றும் மூன்றன் பகுதி யெனப்படும்.

"மூன்றன் பகுதியும்" (தொல். அகத். 41)-இதையே வடவர் திரிவர்க்கம் என்றனர். வேத ஆரியர் வழிபட்டவை, வானம், நில மகள், ஐம்பூதம், கால நிலைகள், கோள்கள், ஆவிகள், இறந்த முன்னோர், சோமக்கள் முதலிய சிறு தெய்வங்களே; அவற்றுட் சில அஃறிணைப் பொருட்களே. முத்தொழில் இறைவனையன்றிக்

கருதுகோட் சிறுதெய்வங்களும் முன்னோராவிகளும் வீடுபேறு நல்கா. வேத ஆரியர் தமிழரொடு தொடர்பு கொண்டு சிவ நெறியும் திருமால் நெறியுமான தமிழ மதங்களைத் தழுவிய பின்னரே, அறம் பொருள் இன்பம் வீடென்னும் தமிழ அற நூற்பாகுபாட்டைத் தர்மார்த்த காம மோட்சமென்று வடமொழியில் மொழி பெயர்த்துக்கொண்டனர்.

இனி, திருமால் மதத்தைக் கடைப் பிடித்த ஆரியக் கண்ணனை ஒரு தோற்றரவு (அவதாரம்) ஆக்கியபின் இயற்றிய பகவத் கீதையும், நுண்வலக்காரமாகப் பிறவியொடு தொடர்புபடுத்திய நால் வரணப் பாகுபாட்டையும் பிராமண வுயர்த்தத்தையுமே அடிப் படைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதால், வேதம் போன்றே திருக்குறளினின்று வேறுபட்டதும் அதை ஒவ்வாததுமாகும்.

"The fourfold caste was created by Me, by the differentiation of Guna and Karma." (பக. கீ. 4:13).

"Of Brahmanas and Kshatriyas and Vaishyas, as also of Sudras, O scorcher of foes, the duties are distributed according to their Gunas born of their own nature."

(ஷை 18 : 41.)

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் பற்றிய தமிழர் கருத்தும் கொள்கையும், ஆரியத்தினின்று முற்றும் அல்லது பெரிதும் வேறுபட்டவையாகும்.

பொருள் வகை	தமிழம்	ஆரியம்
அறம் (தருமம்)	ஈகை அல்லது நல்வினை	அடிப்பட்ட வழக்கு அல்லது பிறவிக்குல ஒழுக்கம் (வருணாசிரம தருமம்), கடமை.
பொருள் (அர்த்தம்)	அறவழியில் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு தொழிலாற் பொருளீட்ட அரசன் துணையா யிருந்து, தானும் தன் காப்புத் தொழிலாற் பொருளீட்டல்	அரசியல் தொழில் அல்லது கலை (Political Science).

பொருள் வகை	தமிழம்	ஆரியம்
இன்பம் (காமம்)	ஒருகணவ ஒரு மனைவி அறவழி இருதலைக் காதலின்பம்	விலங்கியற் காமவின்ப நுகர்ச்சி.
வீடு (மோட்சம்)	இல்லறத்தாலும் துற வறத்தாலும் எல்லா ரும் பெறத்தக்கது	துறவு நிலையாற் பிராம ணன் மட்டும் பெறத் தக்கது.

நாற்பொருளுங் கூறும் நூல் 'திருக்குறள்' ஒன்றே. அது போன்றதொன்று வடமொழியில் இல்லை.

நாற்பொருளும் தனித்தனி கூறும் தமிழ் நூல்களுள் பொருள் நூல்கள் இறந்துபட்டன.

"மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள."
(*தனிப்பா:*)

3. தமிழப் பண்பாட்டின் உயர்வு காட்டுவது

எ - டு: *"ஒழுக்கம் உடைமை குடிமை யிழுக்கம்*
இழிந்த பிறப்பாய் விடும்." (குறள். *133*)

"ஈன்றாள் பசிகாண்பா ளாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை." (டி *656*)

4. நூலமைப்புச் சிறப்பு மிக்கது

மக்கள் வாழ்வுபற்றிய அனைத்துச் செய்தியும் அடங்கும் நாற்பொருளுள்ளும் வீட்டை அறத்துள் அடக்கி முப்பாலாக்கி, நானூறு துறை கொண்ட அகப்பொருளை இருபத்தைந்து துறை யாக ஒடுக்கி, பனைநிழலைக் காட்டும் பனித்துளிபோல் பெரும் பொருள் விரியச் சுருங்கிய சொல்லமையும் குறட்பாவைக் கையாண்டு, அதிகாரந்தொறும் பப்பத்துக் குறள் கொண்ட ஓரிய லமைப்புப் பகுதிகளையெல்லாம் ஆற்றொழுக்காக ஒழுங்குபடுத்தி வலம்புரி முத்துக்கள் பெய்த பொலம்புரிச் சிமிழ்கள்போல் விழுமிய கருத்துக்கள் கெழுமிய 1330 குறள்களையும் அணிபெறத் தொகுத்து, நால்வகை யரண்போன்ற கடவுள் மழை முனிவன் அறம் என்னும் நாற்பொருட் பாயிரத்தைச் சேர்த்துத் 'திருக்குறள்' என்னும் அன்மொழித் தொகைப் பெயர் தெய்வத் தன்மையைக் காட்டி என்றும் நிலவ, திருவள்ளுவர் இயற்றிய உலகத் திருவாய் மொழி இதுவரை எந் நாட்டிலும் இயன்றிராத பொத்தகப் புதுமையே.

5. ஒப்பற்ற உவமைச் சிறப்பினது

எ - டு: *"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது*
மிக்கற்றால் நீள விடல்." (குறள். *1302*)

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு." (டை 1107)

"களித்தானைக் காரணங் காட்டுதல் நீருட்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று." (டை 929)

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை." (டை 964)

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு." (டை 552)

மகராசனார் திருவள்ளுவர் வரலாறு வரைவுந் திறன்

(1) திருக்குறள் இயற்றப்பட்ட சூழ்நிலை தெரிவித்தல்.
(2) திருவள்ளுவர் மனை வாழ்க்கையை இன்று நிகழ்வது போல் அகக்கண்முன் காட்டல்.
(3) ஆராய்ச்சியைத் தூண்டுதல்.
(4) உலகப் பேரறிஞரொடு திருவள்ளுவரை ஒப்புநோக்கல்.
(5) சில சிறப்புக் குறிப்புக்களைச் சேர்த்தல்.

"காமத்துக் காழில் கனி" என்னும் தொடர் பற்றிய குறிப்பும்; திருவள்ளுவர் நகையாடியும், வினைவிலக்கியும், குற்றங் கூறியும், விளைவு கூறி எச்சரித்தும், அறிஞர் செயலை எடுத்துரைத்தும், உவமை கூறியும், கடிந்துரைத்தும், சினந்தும், வைதும், சாவித்தும் பல்வேறு வகையில் தீயோரைத் திருத்துகின்றார் என்பதும் ஆராய்ச்சியைத் தூண்டுவனவே.

திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழிகளைத் தெரிவித்திருப்பதும், T. K. சிதம்பரநாத முதலியாரின் இரண்டொரு குறள் விளக்கவுரைகளை எடுத்துரைத்திருப்பதும், உலக மரக்கறியூண் மாநாட்டு விடைமுகவர் கோவை வரவையும் திருவள்ளுவரைப் பாராட்டியதையும் குறித்திருப்பதும், சிறப்புக் குறிப்புக்களாம்.

முடிபு

ஆங்கிலங் கற்ற தமிழர் அனைவரும், திரு. மகராசனார் 'Tiruvalluvar' என்னும் ஆங்கிலச் சின்னூலை வாங்கிப்படிக்க. விலை $2\frac{1}{2}$ உருபா தான்.

ஏற்கெனவே தமிழ்நாட்டிற் பரவியுள்ள திருவள்ளுவர் திருவுருவப் படத்தில் வடநாட்டு ஆரியச் சாயை கலந்திருப்பதால், பட விற்பனையாளர் திரு. மகராசனாரின் ஆங்கிலச் சுவடிப் படத்தையே இனிமேற் பெரிதாக்கி நாடு முழுதும் பரப்புவாராக.

———

கலைமாமணி புலவர் இரா. இளங்குமரன் அவர்கட்கு மறைமலையடிகள் நூல்நிலைய 20ஆம் ஆண்டு நிறைவு விழாவில் 'கழக இலக்கியச் செம்மல்' என்னும் பட்டமளிப்புக்குப்

பாராட்டுக் கடிதங்கள் :

தமிழன்னைக்குச் செய்த பெருஞ்சிறப்பு

''மறைமலையடிகளார் நூலக விழாவில் தங்கட்குக் 'கழக இலக்கியச் செம்மல்' என்ற சிறப்புப் பெயர் வழங்கிப், பொன்னுடை போர்த்துப் பாராட்டினார்கள்; விழாவிலோர் உள்விழா எடுத்தார்கள்'' என்பதைச் செல்வி மூலம் அறிந்தேன். அதனால் பெருமகிழ் வுற்றேன்.

தாமரைச்செல்வர் உயர்திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் தங்கட்கு உளமாரப் புரிந்த இப் பெருஞ் சிறப்புத் தமிழுள்ளமுடை யோர் அனைவரும் மகிழும் தரத்ததாகலின் யான் மகிழ்வதில் வியப் பொன்றுமில்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். எனவே யானும் தங்கட்கு மட்டும் செய்த சிறப்பன்று, தமிழன்னைக்குச் செய்த பெருஞ் சிறப்பென உளம் பூரிக்கின்றேன். மேலும் தமிழன்னைக்கு அணிபல புனைந்து சிறப்பித்தற்காம் உளவலியும் உடல்வளமும் நிறைவாழ் நாளும் பெற்று நெடிது வாழ்க! என்று என் உளமார வாழ்த்துகிறேன். வாழியர் நெடிதே.

பெரும்புலவர் திரு. பா. நாராயணன் அவர்கள்,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

மாநகர் மதுரையின் மாபெருந் தமிழறிஞர்

மறைமலையடிகள் நூலக இருபதாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட அறிஞர் பெருமக்களில் ஒருவராகவும், அவ்வமயம் மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களிடம் 'கழக இலக்கியச் செம்மல்' என்ற பட்டத்தைப் பெறுபவராகவும், 'செந் தமிழ்ச்செல்வி'யில் தங்கள் உருவப்படங்களைப் பார்த்து நான், பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய உவகைப் பெருக்கு இக் கடிதத்தை எழுதத் தூண்டிற்று.

விழாவின் தொடக்கத்தில் தம் வரவேற்புரையில் தாமரைச் செல்வர் அவர்கள், விழாவில் சிறப்புரை யாற்ற வந்திருப்போர்கள் என்று அறிமுகப்படுத்தும் போது, 'மதுரைப்புலவர் இரா. இளங்

குமரன்' என்று அறிமுகப்படுத்திய பாங்கினையறிந்து பெருமித முற்றேன்.

'செந்தமிழ்ச் செல்வி' ஒவ்வோர் இதழிலும் தங்கள் இலக்கியக் கட்டுரையைப் படித்துவரும் பெற்றியுடையேனாக இருக்கிறேன்.

மறைமலையடிகளார்போல் தாங்கள் ஒரு பரங்குன்றப் பாவல ராக, மாநகர் மதுரையின் மாபெரும் தமிழறிஞராகத் தமிழுக்கும் தமிழ்க் குமுகாயத்துக்கும் பெருமை தேடித் தருபவராகத் தாங்கள் நீண்ட நெடுவாழ்வு வாழவேண்டும் என்று விரும்புகிறேன். வாழ்த் துகிறேன்.

திரு. க. சி. அகமுடை நம்பி, பொறியர், வேலூர்.

தகுதிவாய்ந்த தமிழ்ப்புலவர்

மறைமலையடிகள் நூலக விழாவில் தங்களுக்குக் 'கழக இலக்கியச் செம்மல்' என்னும் பட்டம் அளிக்கப்பெற்ற செய்தி யறிந்து எல்லையற்ற இன்பமடைந்தேன். தாங்கள் இந்தச் சிறப் பிற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர்கள்.

'அரியணையில் அழகு தமிழ்' ஆசிரியர்
திருவாளர் கோ. முத்துப்பிள்ளை அவர்கள், சென்னை.

———

''வாழும் வேலன்''*

[புலவர் இரா. இளங்குமரன்]

''பாலன் ஆனான் உள்ளத்தால்;
பகைத்துத் தமிழைக் கெடுப்பார்க்கு
'வேலன்' ஆனான் விளைபோரில்;
விரும்பும் எழுத்துத் திறத்தாலே
மூலன் ஆனான்; முட்டறுப்பில்
முனைவன் ஆனான்; கூற்றுதைக்கும்
காலன் ஆனான்; தமிழோடு
கலந்து வாழும் சிறப்பாலே !''

* திரு. என். கே. வேலன் அவர்களின் மறைவு குறித்துப் பாடிய இரங்கற்பா.

*வினைத்தொகையின் முன்மொழி பெயரா வினையா?

[ஆ. சிவலிங்கனார், மயிலம்]

ஒருசொல் :

"உயர்மரம்" என்பது வினைத்தொகை. உயர், மரம் என்ற இரு சொற்களின் கூட்டம் போலக் காணப்படினும் ஒரு சொல்லாகவே கொள்ளவேண்டும். தொல்காப்பியர் இத் தொகைச் சொல்லை இரண்டாகப் பிரித்துச் சேர்க்கக்கூடாது என்றார். "எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய" (தொல். சொல்.420) எனப் பொதுவிற் கூறினாரேனும் வினைத்தொகை பண்புத் தொகைகளைப் "புணரியல் நிலையிடை யுணரத் தோன்றா" (தொல். எழு. 482) என விதந்தும் கூறினார்.

காலமொடு வரும் :

வினையெனப்படுவது காலமொடு தோன்றுவதாதலின் வினைத் தொகையும் காலம் காட்டவேண்டும். 'உயர்மரம்' என்பது, உயர்ந்த மரம், உயர்கின்ற மரம், உயரும் மரம் என முக்காலமும் காட்டும். அதனால் ஆசிரியர், "வினையின் தொகுதி காலத் தியலும்" (தொ. சொல். 15) என்றார். உயர்மரம் என்பதற்கு மனதளவில் 'உயர்ந்த மரம்' முதலியவாகக் காலம் நினைந்து பொருள்கொள்ள வேண்டுமே தவிர எழுதிக் காட்டும்படியான நிலையில் உயர்ந்த மரம் முதலியவாகப் பொருள் காணக்கூடாது. ஏன்?

முன்மொழி பெயர்ச்சொல் :

'உயர்ந்த மரம்' என்பதில் 'உயர்ந்த' என்பது பெயரெச்சமாக வந்த வினைச்சொல். இறந்த காலத்து 'உயர்மரம்' என்பதில் முன்மொழியாகிய உயர் என்பது பெயர்ச்சொல். அஃதாவது, உயர்ந்தது உயர்ந்த முதலிய வினைச்சொற்கள் தோன்றுவதற்கு அடிப்படையான வேர்ச்சொல். வேர்ச்சொல் யாவும் பெயர்ச்சொற்

---

*மதுரையில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 9-வது கருத்தரங்கில் படிக்கப்பட்ட இக் கட்டுரை, மன்றச் செயலர்களின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. செயலர்கள் டாக்டர் ச. அகத்தியலிங்கம், டாக்டர் த. ஏ. ஞானமூர்த்தி ஆகிய பெருமக்களுக்கு என் நன்றி.

களே. "தொழில் மாத்திரம் உணர்த்துவன எல்லாம் தொழிற் பெயர் என்பது ஆசிரியர் கருத்து" என்றார் சேனாவரையர். அதனால் 'உயர்' என்பது பெயர்ச்சொல். பிற தொகைகளை நோக்கின் இது தெரியும். கற்கோயில் (வே. தொ) செந்தாமரை (ப. தொ), புலிக்கொற்றன் (உவ. தொ) கபிலபரணர் (உம். தொ) என்பனவற் றின் முன்மொழிகள் பெயராயினமைபோல வினைத்தொகையின் முன் மொழியும் பெயரே. அதனால் சேனாவரையரும் "வினையின் தொகுதி" என்ற நூற்பாவில்,

> "ஆண்டு வினையென்றது எவற்றையெனில் வினைச் சொற்கும் வினைப்பெயர்க்கும் முதல்நிலையாய் உண், தின், செல், கொல் என வினை மாத்திரம் உணர்த்தி நிற்பன வற்றையென்பது"

என எழுதியதும் அறியலாம்.

வினைத்தொகை—பெயர்க்காரணம் :

முன்மொழி பெயர்ச் சொல்லாயின் பெயர்த்தொகையென்னுமல் வினைத்தொகை என்பானேன்? அவ்வாறு கூறின் பிற தொகை களும் பெயர்த்தொகை எனப்பட்டு வேறுபாடறிய இயலாதாம். அதனால் தனிப்பெயரே வேண்டும், மேலும் வினைத்தொகை கால மொடு வருவதாதலினாலும், காலம் காட்டுவது வினையே யாதலி னாலும் முன்மொழியானது வினையும் வினைப்பெயரும் தோன்றுதற் குரிய வேர்ச்சொல் ஆதலினாலும் வினைத்தன்மை அதில் இருப்ப தினால் வினைத்தொகையெனப் பெயர் கொடுக்கப்பட்டது. வினைத் தொகை என்பதற்கு வினைத்தன்மை—காலம் காட்டு நிலை தொக் கது எனக் கொள்ளவேண்டும். வேற்றுமைப் பொருளை விளக்கும் உறுப்பு (ஐ முதலிய உருபுகள்) தொக்கது வேற்றுமைத்தொகை யானாற் போல வினைப்பொருளைத் தரும் உறுப்பு (காலம் காட்டுவன) தொக்கது வினைத்தொகை எனப்பட்டது.

உரையாசிரியர் :

"பெயரெச்சம் நின்று தொக்கது வினைத்தொகை" என்பது உரையாசிரியர் கருத்து. உயர்ந்த மரம் என்றவிடத்து உயர்ந்த என்பது, இறந்த காலமும் ஈற்று அகரமாகிய பெயரெச்ச உறுப்பும் கொண்ட வினைச்சொல். இச் சொல்லில் உள்ள காலம் காட்டும் உறுப்பும் பெயரெச்ச உறுப்பும் மறைந்து 'உயர் மரம்' எனவருவது வினைத்தொகை என்பதும் உயர்மரம் என்பது உயர்ந்த மரம் எனப் பிரிக்கப்படும் என்பதும் அவர் கருத்து.

சேனுவரையர்

வினைத்தொகையைப் பிரிப்பது கூடாது என்பதும் பிரித்தால் பொருள் சிதையும் என்பதும் சேனுவரையர் கருத்து. வினைத் தொகை காலம் காட்டுவது எப்படி எனக் கூற வந்த அவர் "வினையின் தொகுதி காலத்தியலும் எனவே அவ்வினை விரிந்து நின்றவழித் தோன்ருது தொக்க வழித் தொகையாற்றலால் காலந் தோன்றும் என்றவாரும்" (தொ. சொல். 415) என்றும், "காலம் உணர்த்துகின்றுழிப் பெயரெச்சம் பொருளை வாய் நின்றுணர்த்தும் என்பது" என்றும் எழுதியுள்ளார்.

பெயரெச்சச் சொல்லாக விரிந்து நின்றுணர்த்தும் என்னுது பெயரெச்சம் பொருளை வாய் நின்றுணர்த்தும் என்றது காணத்தக்கது.

தம் கொள்கைக்கு ஆசிரியரையே சான்ருகக் கொண்டு,

> ஆசிரியர் இவற்றைப் (வி. தொ;'ப. தொ), பிரித்தும் புணர்க்கப்படா; வழங்கியவாறே கொள்ளப்படும் என்றது (எழு. 482) பிரித்தவழித் தொகைப்பொருள் சிதைதலா னன்றே? கொன்ற யானை என விரித்த வழியும் அப் பொருள் சிதைவின்றேல் "புணரியல் நிலையிடை யுணரத் தோன்ரு" என்னுதற்கோர் காரணம் இல்லையாம்; அதனுல் பெயரெச்சம் நின்று தொகுதல் ஆசிரியர் கருத் தன்மையால் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க.

என்றெழுதிக் காட்டினுர். இதில் உள்ள ஒரு வியப்பு, உரையாசி ரியர்க்கும் அது கருத்தன்று என்று கூறியதாகும்.

இரு பெயர் ஒட்டு

தொல்காப்பியர் ஆகு பெயர் இலக்கணமாக "முதலிற் கூறும் சினையறிகிளவியும் (சொல். 114.) என்ற நூற்பாவில் இருபெய ரொட்டு நிலையிலும் ஆகுபெயர் வரும் என்ருர். அது இருபெயர் ஒட்டாகு பெயர் எனப்படும். இவ் விருபெயரொட் டாகுபெயரென் பது அன்மொழித் தொகையே என்பது சேனுவரையர் கருத்து. இதை அன்மொழி யாகுபெயர் எனவும் கூறுவர். இரு பெயரொட் டாகு பெயரும் அன்மொழித் தொகையும் ஒன்றே என்றும் ஆகு பெயர் நிலையில் ஆகுபெயர் எனவும் தொகைநிலையில் அன்மொழித் தொகை எனவும் பெயர் பெறும் என்பர் அவர். உரையாசிரியர்க்கும் இதுவே கருத்தாதல் வேண்டும் என நாம் கருதலாம். ஏன் எனின் இரண்டும் வேறு வேறெனக் கொண்டிருப்பாரேல் சேனுவரையர்

அதை எழுதி மறுத்திருப்பர். அதனால் உரையாசிரியர்க்கும் இரண்டும் ஒன்றே என்ற கருத்துண்டு எனலாம்.

'ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழியாத'லின் அவ் வைந்தொகைகளின் முன்பின் மொழிகள் பெயராதலின் அவை இருபெயரொட்டு எனப்பட்டன. இக் கருத்தை உரையாசிரியர் கொண்டிருந்தவராயின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகிய ஆகுபெயர்க்கும் முன்மொழியும் பின் மொழியும் பெயர்ச் சொற்களே என்பது அவர்க்கும் உடன்பாடாம். அப்படியாயின், பெயரெச்சம் நின்று தொக்கது வினைத்தொகை என்றால் பெயரெச்சத் தொடரின் முன்மொழி வினைச்சொல் ஆதலின் இருபெயரொட்டு என்பதற்கு மாறுபடுமே. அதனால்தான் உரையாசிரியர்க்கும் கருத்தன்று என்றார் சேனாவரையர்.

> 'அல்லதூஉம் ஆகுபெயர் உணர்த்தியவழி வினைத் தொகையுளப்பட இருபெயரொட்டும் என்றாராக லானும் வினை நின்று தொகுதல் அவர்க்கு (தொல்காப் பியர்க்குக்) கருத்தன்மையறிக'

என்ற கருத்தையும் எழுதினால் (இதிலும் ஆசிரியர்க்குக் கருத்தன்று என்றாலும் உரையாசிரியர்க்கும் கருத்தன்று என்றதாகவே கொள்ளவேண்டும்.)

இதுகாறும் கூறியவாற்றால், வினைத்தொகை என்பது இரு சொற்றொடராயினும் பிரிக்கக்கூடாத ஒரு சொல் நிலையதே என்பதும், அது பெயரும் பெயரும் சேர்ந்த சொற்றொடரே என்பதும், அதனால் பெயரெச்சம் நின்று தொக்கது என்பது பொருந்தாது என்பதும், உரையாசிரியரும் சேனாவரையர் கருத்தினரே என்பதும் பெறப்படும்.

———

மெய்யறிவு

முழுநிறை அறிவு நாற்கூறுடையது. அவை : அறிவு—அஃதாவது நேர்மையான செயல்புரியும் ஒழுங்குமுறை; நேர்மை—அஃதாவது தனிவாழ்வு பொதுவாழ்வு இரண்டிலும் ஒப்ப நடப்பது; வீரம்—அஃதாவது இடர்கண்டு கலங்காது ஏற்றல்; தன்னடக்கம்—அஃதாவது அவாவை அடக்கி வழிப் படுத்தல்.

—பிளேட்டோ

சங்கநூற் காட்சிகள் :

வயலையே! வாடினையோ?

[டாக்டர் சோ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச் டி.,]

உணர்ச்சிநிலை :

அழுத்தமான உணர்ச்சிக்கு வடிவம் கொடுக்கின்ருன் கவிஞன்; அருமையான கவிதை உருப்பெறுகின்றது. தான் அடைந்த உணர்ச்சியை எவ்வாறு கவிதையில் தருகின்ருன்? சொற்கள் கருவியாக அவனுடைய உணர்ச்சி கவிதையின் முழுவடிவிலும் ஆக்கம் பெறுகின்றது. சங்கப்பாட்டுக்களுள் இத்தகு உணர்ச்சிக்குத் தக்க எடுத்துக்காட்டு ஒன்றினைக் காணலாம்.

பெற்றமனத்தின் பேச்சு :

அன்புடன் வளர்த்த அருமைமகள் தன் மனத்துக்கு இனியவனுடன் பெற்ருேர், சுற்றத்தார் அறியாமல் வெளியேறி விடுகின்ருள். பொழுதுபுலர்ந்ததும்தான் தலைவன் உடன்போய்விட்ட செய்தி தெரியவருகிறது. பெற்றவள் புலம்புகின்ருள்; அந்தப் புலம்பலின் அடிப்படை அவல உணர்வு. தன் அரவணைப்பிலே வளர்ந்த இளையமகள் தன்னையும் நினையாமல் பிரிந்துசென்று விட்டாளே தன்னுடைய காதலனுடன் என்று எண்ணி எண்ணி உருகுகின்ருள். அதற்குள் ஊரிலும், சேரியிலும் செய்தி மெல்ல மெல்லப் பரவிவிடுகின்றது. பெற்றமனத்தின் பேரன்பு எல்லை காண இயலாதது; பெற்று வளர்த்த அருமை அந்த உள்ளத்தில் பெருக்கெடுக்கின்றது. கண்ணீர் மல்க வீட்டையும் சுற்றுப்புறத்தையும் நோக்குகின்ருள் அந்தத் தாய்.

சூழ்நிலை நோக்கல் :

மனையின் முன்புறமுள்ள சிறுதோட்டம்; அங்கே தழைத்து வளர்ந்திருக்கின்ற செடி கொடிகள், ஆம்; அவள், தன்மகள் ஆசையோடு நீர் ஊற்றி வளர்த்த தாவரங்கள் அவை என்று எண்ணுகின்ற பொழுதே அந்த மனத்தில் அவலம் பெருகுகின்றது. எழுந்து அந்தச் செடி கொடிகளைப் பார்க்கின்ருள் கண்ணீரினூடே அந்த அன்னை. அந்த ஓரறிவுயிர்கூடத் தன்னைப்

போல் வருந்துகின்றது என்று எண்ணுகின்றது அந்த அன்பு உள்ளம்.

கருத்திலே காட்சி :

நாள்தோறும் தன் அன்புமகள் அந்தச் செடி கொடிகளைத் தாய் முகத்தோடு நோக்கி அன்போடு தடவித் தடவிப் பார்ப்பாள். அதுமட்டுமோ ? அந்த அன்னையின் கண்களில் ஒரு காட்சி மெல்ல மெல்ல விரிகின்றது.

தலைவி, பெரிய சாலில் நிறையத் தண்ணீரை முகந்துகொண்டு வருவாள் ; கிணற்றின் வழியே மூங்கிற் குழாயினின்றும் ஓடிவந்த நீர் ; அதனைத் தூக்கிக்கொண்டு, செடிகொடிகட்கு—குறிப்பாக, அதோ அந்த வயலைக் கொடிக்கு வார்த்து இன்புறுவாள் ; அப்போது அவளுடைய அழகிய கைகளில் வளையல்கள் அசைந்து இனிய ஒலி எழுப்பும் ; சின்னஞ்சிறு எழிலார்ந்த கால்களில் அணிந்த சிலம்பு 'கலீர்' 'கலீர்' என்று ஓசையிடும். தன் அழகிய ஆடைக்கு நாள்தோறும் புதிய தழைகளைத் தந்து உதவும் அந்த வயலைக் கொடியைக் குழந்தைபோல் நீர் உண்பித்த அந்தச் சிறிய தாய் எங்கே இப்போது ? தாயின் விழிப்படலங்களைக் கண்ணீர்த் திவலைகள் மறைக்கின்றன.

உணர்ச்சி உரை :

''வயலைக் கொடியே ! அவளைப்போல இனி யார் உனக்கு நிரம்ப நீர் ஊற்றுவார்கள் ? தன்னை இனிது வளர்த்தெடுத்த என்னையும் பிரிந்து சென்று விட்டாளே அவள் ! சேரியிலும், ஊரிலும் உள்ளோர் அலர் தூற்றும்படி அகன்றுவிட்டாளே ! காடும் சோலைகளும் அத் தலைவனோடு போகத் துணிவு கொண்டு விட்டாளே ! காடும், தேயமும் நனிபல கடந்து சென்ற அவள் மென்மை எல்லாம் எங்குப் போய் ஒளித்தனவோ ? 'வன்கண்மை' உடைய 'வன்கண்ணி' ஆயினளே ! ஆயினும் 'சிறுமி' யன்றோ ? அவளுக்கு அழகு செய்வோர்—தோழியர் போல நீயும் வாடி விட்டாயே நீ ! ஐயோ ! பாவம் ! அவளைப்போல அன்னமனம் கொண்டு நீர் ஊற்றி உன்னை அவ்வளவு அன்பாக யார் வளர்க்கப் போகின்றார்கள் ? நீ வாழி''

என்று பேசி முடிக்கின்றாள் அந்தத் தாய். அவள் உள்ளத்திற்கு வயலைக்கொடி நீர் பெறாது வாடிய வாட்டம், தன்னைத் தாய் முகத்துடன் நோக்கி நோக்கி அன்பினோடு உண்பித்த தலைவியைப் பிரிந்த வாட்டமாகவே தோன்றுகின்றது. இதுதான் உணர்வின்

கொடுமுடி. தன்னுடைய நெஞ்செலாம் நிறைந்த நேயத்தால், அவளது பிரிவு தாங்காது அடைந்த அவலத்தையே அந்த ஓரறிவுயிரும் எய்தியதாகக் கருதும் அந்தத் தாய்மனத்தை ஓவியமாக்கியதன் வாயிலாக, இவ் வுணச்சி ஓவியத்தைப் படைத்த கயமனர், தலை சிறந்து நிற்கின்றார்; நித்திலக்கோவையிலே கோத்ததோர் கவி முத்தாக (383) அகநானூற்றிலே இந்தக் கவிதையை நாம் காண்கின்றோம்.

'வாடினை, வாழியோ, வயலை!'

என்ற சொற்கள் எல்லையற்ற அவலத்தின் ஆழத்தை இனிது புலப்படுத்துகின்றன. நம் கண்முன்னே, ஒரு தாய் மட்டுமா இங்குத் தோன்றுகின்றாள்! அந்தச் சின்னஞ்சிறு செல்வமகள் வளர்த்த பூந்தோட்டமே யன்றோ தோன்றுகின்றது! வாடிய வயலைக் கொடியின் உணர்வுமன்றோ பின்னித் தோன்றுகின்றது! ஓரறிவுயிர்கட்கும் நுட்பமான மெல்லிய உணர்வு உண்டு என்ற அறிவியல் உண்மை நம்முடைய உள்ளத்தே சுடர்விடுதலும் காண்கின்றோம்.

கவிதை வடிவம்:

கயமனர் படைத்துள்ள இந்தக் கவிதையின் அழகிய வடிவம் பின்வருவது:

"தற்புரந் தெடுத்த எற்றுறந் துள்ளாள்
ஊரும் சேரியும் ஓராங்கு அலரெழக்
காடும் காவும் அவனொடு துணிந்து
நாடும் தேயமும் நனிபல இறந்த
சிறுவன்கண்ணிக்கு ஏர் தேறுவரென
வாடினை வாழியோ வயலை! நாடொறும்
பல்கிளைக் கொடிக் கொம்பு அலமர மலர்ந்த
அல்குல் தழைக்கூட்டு அங்குழை உதவிய
வினையமை வரல்நீர் விழுத்தொடி தத்தக்
கமஞ்சூற் பெருநிறை தயங்க, முகந்துகொண்டு
ஆய்மடக் கண்ணள், தாய்முகம் நோக்கிப்
பெய்சிலம்பு ஒலிப்பப் பெயர்வனள் வைகலும்;
ஆர நீர்ஊட்டிப் புரப்போர்
யார்மற்றுப் பெறுகுவை? அளியை நீயே!"

(அகம்-383-நித்திலக்கோவை)

கண்ணீர்க்கவிதை :

"தன்னுடைய மகள் தன் மனத்துக்கு இனியவனொடு தானே சென்றனள்; அது நடைமுறைக்கு ஒத்ததே அன்றோ?" என்று அந்த அன்னைமனம் உணரவில்லை. பிரிவு ஒன்றே அவளுக்குள் சுழலும் உணர்வு. அதனால் உந்தப்பட்ட உள்ளமே அங்குக் குரல் கொடுக்கின்றது. அதற்கேற்றவாறு சொற்கள், பாட்டின் போக்கு, வயலைக் கொடியை நோக்கியதாகப் பொருளமைப்பு—ஆகிய அத்துணையும் அமைந்துள்ளன. சங்கநூற் பேழையுள் இருக்கும் ஒவ்வொரு கவிதையும் இத்தகைய அரும்பொருட் கருவூலமே. தாயின் கண்ணீர்க்கவிதைக்கு இஃது ஒரு தக்க எடுத்துக்காட்டு.

———

இயற்கை ஓவியக் கட்டுரைக்குப் பாராட்டு

[திரு. கோ. முத்துப்பிள்ளை அவர்கள்]

"இயற்கை ஓவியம் என்னும் தலைப்பில் வெளிவரும் கட்டுரைகளைப் படித்து இன்புற்றேன். "**கயந்தலையும் காரானும்**" என்னும் கட்டுரை மிகச்சிறந்த கட்டுரையாகும். நான் மிகவும் சுவைத்து இருமுறை படித்தேன். 'ஓவியம்' என்னும் பெயருக்கேற்ப, காட்சியை நேரில் காண்பது போலவே கண்டு களித்தேன். சொல்நயமும் பொருள்நயமும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன.

"கடியாத பாம்பும் அடியாத மாந்தரும்"

"நச்சுப் பாம்பும் பச்சைக் குழந்தையும்"

"அகப்பட்ட பாட்டு அகப்பாட்டு"

இவை ஒரு சில எடுத்துக்காட்டுகள்.

"மின் தாக்குதலுக்கு ஆட்பட்டவரைக் கட்டிப்பிடித்து விடுவிக்க முடியுமா?" நிறைய எழுத விரும்புகிறேன். தமிழ்நடை தங்களுக்குத் தனியொரு புதுமை நடையாக அமைந்துள்ளது. தெளிந்த நடையாக மிளிர்கின்றது.

"**அருள்வளர் ஆமான்**" என்னும் கட்டுரையும் அருமையுடைய "அலைப்பு இல்லை, அலைக்கழிவு இல்லை;" "வள்ளலார் உள்ளம் வாய்த்தது ஆமான்" "ஒட்டிக்கிடக்கும் குட்டி" "கட்டிக்கிடக்கும் பால்" எழுதிக்கொண்டே செல்லலாமென்று தோன்றுகின்றது.

இயற்கை ஓவியம் ஆறுபோல் பெருகவேண்டும். விரைவில் நூலாக வரவேண்டும்.

———

பண்பாளருடன் பதினைந்து நாள்

[புலவர் சு. தமிழ்வேலன், க. மு.]

முன்னுரை :

பொன்னொடு தோன்றிப் புகழொடு வாழ்ந்து பொன்னுடு புகுந்த ஐயா (திரு. குழந்தைவேலன் பி. ஏ.,) அவர்களுடைய அறிவு, ஆற்றல்களைப் பற்றி அவர்கள் எழுதிய நூல்களைப் படித்த அனைவரும் அறிவர். ஆனால், அவர்களுடைய அன்பு, அடக்கம், எளிமை, இனிமை, பொறுமை, நேர்மை, சான்றாண்மை, கடமையுணர்வு, இறையன்பு போன்ற நற்பண்புகளை அவர்களோடு பழகும் பேறு பெற்றவர்களே அறிய இயலும். அத்தகைய பேறு எளியேனுக்கு வாய்த்தது. எனினும், இருபத்தாறாயிரத்து நானூற்று எழுபத்தாறு (26476) நாள்கள் வாழ்ந்த அப் பெரு வாழ்வின் சிறப்பினைப் பதினைந்தே நாள் பழகிய சிறியேன் அறிந்து கூற முற்படுவது கடலின் நீரை நாழிகொண்டு அளக்க முற்படும் தகைமையதே. ஆனாலும், பெருமலையின் உருவினை ஒரு சிறு பனித்துளியில் காண்பதுபோல ஒருவாறு காண முயல்வோம்.

சந்திப்பு :

28—1—76 முதல் 11—2—76 முடியக் கோவையில் முறை சாராக் கல்வி இலக்கியப் படைப்புப் பயிற்சி ஒன்று அரசினரால் நடத்தப்பெற்றது. அப் பயிற்சிக்கு ஐயா அவர்கள் வருவதாகவும், தமது பரிந்துரையின் பேரில் என் பெயரும் சேர்க்கப்பட்டிருப்ப தாகவும், அரசின் உத்தரவு வந்ததும் தவறாமல் செல்லும்படி யாகவும் கழகப் பொது மேலாளர் திரு. இரா. கலியாணசுந்தரர் பி. எசி. அவர்கள் எனக்கு எழுதியிருந்தார்கள். அதன்படி யான் அப் பயிற்சிக்குச் சென்றிருந்தேன்.

அதற்கு முன்னரே ஐயா அவர்கள் எழுதிய நூல்களில் பல வற்றை யான் படித்திருந்தமையால் ஓர் உயர்ந்த எழுத்தாள ருடைய தொடர்பு கிடைக்கப் போகிறது என்று மகிழ்ச்சியோடு இருந்தேன்.

யான் முன்னமே சென்றிருந்தமையால் அவண் வந்த எழுத் தாளர் ஒவ்வொருவரையும் "இவர் தாமோ, இவர் தாமோ" என்று ஐயுற்று உசாவிக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் ஐயா அவர்கள் கழகத்தின் கோவைக் கிளை மேலாளருடனும் பணியாளர் ஒருவருடனும் ஊர்தியில் வந்து இறங்கினார்கள்.

நெடிய உருவம் ; எடுப்பான உடை ; கூரிய பார்வை ; பெருமிதமான தோற்றம்; இவற்றைக் கண்டவுடன் யாரோ அரசு அதிகாரி போலும் என்று எண்ணி வாளா விருந்தேன். சிறிது நேரம் கழிந்த பிறகுதான் அவர் வேறு யாருமல்லர். நம் அன்புக்குரிய ஐயா வேலனுர் என்பதை அறிந்தேன். ஆவினைக் கண்ட கன்று போலும் ஓடோடிச் சென்று வணங்கி என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன்.

கழக வழியாக என்னை அவர்கள் அறிந்திருந்தமையால் கன்றினைக் கண்ட சேதாப்போல அன்பொழுகப் பேசினுர்கள். அதுமுதல் பதினைந்து நாள்வரை தாயின் மடியை விடாது பற்றி நிற்கும் சேயினைப்போல அப் பண்பாளருடன் இருந்தேன். பெறற்கரிய பேறு பெற்றேன்.

பொறுமை :

ஐயா அவர்களைப் பொறுமையின் புகலிடம் எனப் புகழ்வதா, அடக்கத்தின் அடைக்கலம் எனப் போற்றுவதா எனத் தெரியவில்லை.

அங்கே எழுத்தாளர்களுக்கென ஓர் உயர்நிலைப் பள்ளியில் சில அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஒவ்வோர் அறையிலும் ஐந்துபேர் ஆறுபேர் தங்க வேண்டியிருந்தது. தரையிலேயே அமரவேண்டியிருந்தது. மேலும், எழுத்தாளர்கள் என்ற பெயரில் அங்கே பலவகைப்பட்ட நண்பர்கள் வந்திருந்தனர். அவர்களில் சிலர் ஓரிடத்தில் கூடுவதும், பேசிக்களிப்பதும், சிரிப்பதுமாக இருந்தனர். இவை எல்லாம் ஐயா அவர்களுக்கு மிகுந்த துன்பத்தை விளைவித்தன.

''அதிகாரியிடம் சொல்லித் தங்களுக்குத் தனி அறை கேட்போம்'' என்று யான் கூறினேன். ஐயா அவர்கள் ''கூடவே கூடாது. பொது விதிக்குக் கட்டுப்படவேண்டும். துன்பத்தைப் பொறுப்பதில்தான் நமது வலிமை வெளிப்படவேண்டும்'' என்று கூறிவிட்டார்கள்.

யானோ செவிடன் ; பிறரிடம் பேசுவது என்றால் தயங்குபவன். எனினும், ஐயா அவர்கள் படும் துயரை உணர்ந்து அதனைப் போக்கும் வேட்கை மிகுதியால், அங்கே முதியோர் கல்விச் சிறப்பு அதிகாரியாக இருந்தவரும் பேராசிரியர் ஔவை அவர்களின் அருமை மருகருமாகிய திரு இரமணன் அவர்களை அணுகி நிலைமையை விளக்கினேன். அறிஞர் குடும்பத்தில் வந்த அவர்க்கன்றோ

அறிஞரின் பெருமை தெரியும்! உடனே பிறந்தது உத்தரவு. மேல் மாடியில் ஐயா அவர்களுக்குத் தனி அறை ஒதுக்கப்பட்டது. இருக்கை ஏந்துகளும் அமைத்துத் தரப்பட்டன.

பிறர் மதிப்புப் பேணல் :

ஐயா அவர்கள் என்னையும் தம் அறையில் வைத்துக் கொண்டார்கள். யானும் நிழல்போல் நீங்காமல் இருந்தேன். அவர்கள் ஏவாமலேயே குறிப்பறிந்து அவர்களுக்கு வேண்டிய (கடைக்குச் சென்று வருதல், குடிநீர் எடுத்து வருதல, அஞ்சல் நிலையம் சென்றுவருதல், குளிப்பதற்கு வெந்நீர் விளாவித் தருதல், நூலினைப் படிஎடுத்தல் போன்ற) பணிகளைச் செய்துவந்தேன்.

முதலில் ஐயா அவர்கள் யான் இவ்வாறு செய்வதைத் தடுத் தார்கள். "நீங்களும் எழுத்தாளர், நீங்கள் இப்படிச் செய்தால் உங்கள் மதிப்பு என்ன ஆகும்?'' என்று கேட்டார்கள். ''யான் உங்கள் பிள்ளையாய் இருந்தால் இத்தகு உதவிகளை ஏற்றுக்கொள் வீர்கள் அல்லவா ? என்னை உங்கள் பிள்ளையாக எண்ணிக்கொள் ளுங்கள்'' என்று கூறிவிட்டேன். அதன் பின் அவர்களால் மறுக்க இயலவில்லை.

ஆனாலும், துணி தோய்ப்பது, கோப்புகளைத் தூக்கிச் செல்வது ஆகிய இரு வேலைகளையும் கண்டிப்பாகத் தடுத்துவிட்டார்கள். ''என் சொந்த மகனாக இருந்தாலும் இந்தப் பொது இடத்தில் இச் செயல்களுக்கு இசையமாட்டேன்'' என்று கூறிவிட்டார்கள். அப்போதுதான் அவர்களுடைய குரல் ஒரு காவல்துறை அதிகாரி யின் குரலாக ஒலித்தது.

தாயன்பு :

திடுமென ஒருநாள் இரவு எனக்கு வயிற்றுப்போக்கும் கக்க லும் ஏற்பட்டன. அதனால் மறுநாள் காலையில் எழுந்திருக்க இயலாமல் கிடந்தேன். அதனைக் கண்ட ஐயா அவர்கள் மிக வருந்தி னார்கள். பின் மாடியை விட்டுக் கீழே இறங்கிச் சென்றார்கள். யான் அவர்கள் காலைச் சிற்றுண்டிக்காகச் செல்வதாக எண்ணியிருந் தேன். ஒரு மணிநேரம் கழித்துக் கையில் ஓமநீர்ப் புட்டியோடு வந்தார்கள். அன்று மாலையிலேயே நான் நலம் பெற்றேன்.

முதுமையால் தளர்ந்து ஏறத்தாழத் தள்ளாடும் நிலையில் இருந்த அவர்கள் சிறியேன்பால் கொண்ட அன்பால் ஒவ்வொரு கடையாகக் கேட்டுக்கொண்டே சென்று, இரண்டு கல் தொலை விற்கு அப்பாலுள்ள ஒரு கடையில் இருந்து அதனை வாங்கி வந்

திருந்தார்கள். அதை அறிந்ததும் உண்மையிலேயே யான் உள்ளம் குழைந்துபோனேன். அவர்கள் என்மீது வைத்திருந்த தாயன்பிற்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன் ?

அடக்கம் :

பயிற்சியின் தொடக்கநாள் கருத்தரங்கில் எழுத்தாளர் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். வெண்மை உடையவரும் கூட தம்மைத் தாமே வியந்து பாராட்டிக்கொண்ட அந்தச் சூழ்நிலையில் ஏறத்தாழ நூறு நூல்கள் எழுதிய ஐயா அவர்கள் மிக அடக்கமாக ஊரும் பேரும் மட்டும் சொல்லி அமைந்தார்கள். அவர்கள் பெருமையைக் காலப்போக்கில்தான் அனைவரும் உணரலாயினர்.

தலைமையாசிரியர் பாராட்டு :

நாங்கள் தங்கியிருந்த சர்வ சன உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் எழுத்தாளர்களுக்குச் செய்த உதவிகளைப் பாராட்டி இறுதி நாளன்று ஒரு பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு நன்றி தெரிவித்துப் பேசிய அத் தலைமையாசிரியர் அவர்கள், ஐயா அவர்களின் எழுத்துப் பணியினை விதந்து கூறிப் பாராட்டினார்கள். காரணியம் அவர்கள் முன்னமே ஐயா அவர்களின் நூல்களைப் படித்திருந்ததும் அவற்றைத் தம் பள்ளியில் வாங்கி வைத்திருந்தமையுமே யாகும். 'பாம்பறியும் பாம்பின் கால்' என்பது மெய்யேயாயிற்று.

காகமும் பொன்னிறமே :

ஐயா அவாகளும் யானும் கழக நூலாசிரியர்களாகையாலும், நாங்கள் இருவரும் எப்போதும் சேர்ந்தே காணப்பட்டமையாலும், எங்கள் இருவர் பெயரிலும் "வேலன்" அமைந்திருப்பதாலும் நாளடைவில் நாங்கள் "இருவேலன்கள்" என அழைக்கப்பட்டோம். ஐயாவோடு சேர்த்து மதிக்கப்பெறும் தகுதி எனக்கில்லை யெனினும் "பனிமாலிமையப் பொருப்பகம் சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறமாய் இருக்கும்" என்ற ஆன்றோர் கூற்றுக்கிணங்க யானும் மதிக்கப்பெற்றேன்.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புக்களும்

திருவள்ளுவர் திருநாள்

16—1—80 அன்று, வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவர் திருநாள் முனைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், நீதிபதி முனைவர் சு. மகராசன் அவர்கள் எழுதிய 'திருவள்ளுவர்' என்னும் ஆங்கில நூலை வெளியிட்டார். மாண்புமிகு நிதியமைச்சர் திரு. கி. மனோகரன் அவர்கள் நூல் ஆய்வுரை ஆற்றினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் திருக்குறள் நூற் காட்சியினைத் திறந்து வைத்துக் கருத்தரங்கத்தின் தொடக்க உரையினை ஆற்றினார்.

அன்று பிற்பகல் தவத்திரு. குன்றக்குடியடிகளார் தலைமையில் பட்டி மண்டபம் ஒன்று நடைபெற்றது. அறிஞர் பலர் சொற்போரிட்டனர். சிலம்புச் செல்வர் முனைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில், தலைமை நீதிபதி முனைவர் மு. மு. இசுமாயில் அவர்கள் 'தீர்ப்புத் திரட்டு' 'குற்ற வழக்கு - தீர்ப்புத் திரட்டு' என்னும் திங்கள் வெளியீடுகளின் முதல் இதழ்களை வெளியிட்டார். மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விளக்கவுரையாற்றினார்.

மாண்புமிகு முதலமைச்சர், திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்ததோடு அகவை முதிர்ந்த தமிழறிஞர்கட்கு உதவித் தொகையும், தமிழில் சிறந்த வரைவுகள் எழுதியவர்கட்குப் பரிசுகளும் வழங்கி நிறைவுரையாற்றினார்.

வண்ணச் சரபம் தண்டபாணியடிகள் 141ஆவது பிறந்த நாள் விழா

1839இல் திருநெல்வேலியில் தோன்றி, இளமை முதல் வேல் வழிபாடு செய்து, புதிய தமிழ்க் கவிகள் இயற்றிப் பல பதிவழிபாட்டுடன் ஆங்காங்குள்ள கடவுள்மீது சமய வேறுபாடுகளற்ற நிலையில் வழிபாட்டு நூல்கள் பல அருளிய வண்ணச் சரபம் தண்டபாணியடிகளின் 141ஆவது பிறந்தநாள் விழா சென்னைக் கந்தகோட்டம் முருகப் பெருமான் திருமுன்னில் 13—12—79 அன்று, இரும்பு வணிகர், ஊழியர் ஆகியோரால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அன்று மாலை புலவர் தி. மு. சங்கரலிங்கம் அவர்கள் தண்டபாணியடிகளின் வாழ்க்கை வரலாறு பற்றிய சொற்பொழிவாற்றினார். திரு. சீனிவாசன் நன்றியுரை கூற விழா இனிது முடிந்தது.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்குப் பாராட்டு

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு விழா 25—12—79இல் காரைக்குடி மீனாட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. கம்பன் அடிப்பொடி அவர்கள் விழாவினைத் தொடங்கி

வைத்துக் குழந்தைக் கவிஞரைப் பாராட்டினர். தவத்திரு. குன்றக்குடியடிகளார் கவிஞர் அவர்களைப் பாராட்டிப் பொன்னடை போர்த்திச் சிறப்பித்தார். கவியரசர் முடியரசன் குழந்தைக் கவிஞருக்கு "மழலைக் கவிச்செம்மல்" என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினர். சிலம்பொலி செல்லப்பன் சிறப்புரை ஆற்றினர். மற்றும் அறிஞர் பலர் பாராட்டுரை வழங்கினர். இவ் விழாவினை யொட்டிக் கருத்தரங்கு, பாடல் போட்டி முதலியனவும் நடைபெற்றன. கவிஞர் ஜோசப் ஸ்டாலின் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

மறைமலையடிகள் நூல்நிலையம் 20ஆம் ஆண்டு நிறைவுவிழா மலருக்கு வாழ்த்து

தங்கள் நூல்நிலையத்தின் விழா அழைப்புக் கிடைக்கப்பெற்று மகிழ்கின்றேன். உங்கள் நூல்நிலையம் தமிழ்நாடு பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களைக் கருத்தோடு தொகுத்து வெளியிட்டுப் பரப்பிவருகிறது. ஒவ்வொரு மாநிலத்தின் வரலாற்றுத் தொகுப்பு அயல் மாநிலங்கட்கு வழிகாட்டுவதாகும். உள்ளபடி இந்தியநாட்டின் வரலாற்றினை முழுமையும் எழுதுவதற்குத் தனித்தனி மாநில வரலாறுகள் மிகவும் பயன்படும். தங்கள் நூல்நிலையம் போன்று ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் } கிர்ஜா குமார்
புது தில்லி. நூலகர்

சீருப்புராணம் தொடர்சொற்பொழிவுகள்

'மீரா ஃபௌண்டேஷன்' சார்பில் 3—2—80இல் தொடங்கி ஒவ்வொரு மாதமும் முதல்ஞாயிறு, மூன்றும் ஞாயிற்றுக் கிழமைகளில், 261 லிங்கிச்செட்டித்தெரு, மறைமலையடிகள் நூலகமண்டபத்தில், சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் சீருப்புராணச் சொற்பொழிவு நிகழ்த்துவார். முதல் சொற்பொழிவுக்குப் பன்னூலாசிரியர் எம். ஆர். எம். அப்துற்றகீம், பி.ஏ., அவர்கள் தலைமை தாங்கினர்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ருச—உஎகஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள், கழக ஆட்சியாளர்	10	00
,, ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள், கழக மேலாளர்	5	00
,, A. T. A. ஈஸ்வர், சென்னை-1	5	00
,, திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள்	120	00
,, மு. இரகுபாய், மயிலை	25	00
,, இல. செ. கந்தசாமி, கோவை	25	00
,, க. சந்திரசேகரன், கரந்தை, தஞ்சை	10	00
,, தி. சி. பரமசிவன், சென்னை (செல்வன் சி. ஞானசம்பந்தன் திருமண நன்கொடை)	5	00
,, க. வ. முத்தையா பிள்ளை எம். ஏ., நெல்லை (செல்வன் சிவன் திருமண நன்கொடை)	10	00

மதிப்புரை

திருமுதுகுன்றம் பெரியநாயகியம்மை பிள்ளைத் தமிழ்

[திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலைத் திருத்துறையூர் மெய் கண்ட சந்தானம் வீர சைவாதீனம் 20ஆம் குருமூர்த்தி சிவத்திரு. சொக்கலிங்க சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் அருளிச் செய்தது. குமராதேவர் மடம், திருமுதுகுன்றம், விலை ரூ. 2.50.]

திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியுள்ள பெரியநாயகி அம்மையைப் பற்றிப் பாடியுள்ள இப் பிள்ளைத் தமிழ் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்றுள்ளது. பாடல்கள், அனைவரும் படித்தின் புறும் வகையில் பதம் பிரித்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. நூலின் சிறப்பு, நூற்பயன் ஆகியன பற்றித் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் முன்னுரையில் நன்கு விளக்கியுள்ளார். அன்பர்கள் இதனைப் படித்துப் பெரியநாயகியம்மையின் திருவருள் பெறுவார்களாக.

சாங்கிய காரிகை

[ஆசிரியர்: நெல்லை க. சுப்பிரமணியன். உமா நூலகம், 19 வேம்படித் தெரு, திருநெல்வேலி-6, விலை: ரூ. 6/-.]

இந்திய தத்துவங்கள் ஆறனுள் ஒன்று சாங்கிய தத்துவம், மணிமேகலை, நீலகேசி போன்ற பழம்பெருங் காப்பியங்களில் சாங்கிய தத்துவம் பேசப்பெற்றிருப்பினும் அதன் உட்கருத்துக்களை எடுத்துக் கூறும் மூலநூல் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. இக் குறையைப் போக்க எழுந்த இந் நூல் வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க, துணிவான முதல் முயற்சியாகும்.

இயற்கை வாதத்தை அடிப்படையாகக் கொண்டது சாங்கியம். ஒவ்வொரு பொருளும் தத்தம் இயற்கை முறையிலே மாறுதலடை கின்றன என்பது இயற்கைவாதம். உலகத் தோற்றத்தில் காணப்படும் மூலப்பொருள்கள் 25 எனக் கணக்கிட்டு அவற்றை அடிப்படையாகக் கொண்ட 25 தத்துவங்களே சாங்கியத்தின் அடிப்படைக் கூறுகளாகும்.

பூதங்கள் 5, அவற்றின் தன்மாத்திரைகள் 5, அறிபொறிகள் 5, செயற்பொறிகள் 5, மான், செருக்கு, மானம் என்னும் அகக்கரணங்கள் 3, இவை தோன்றுவதற்கு மூலமான மூலப்பகுதி 1, மூலப்பகுதிக்கு முற்றும் வேறான புருடன் 1 ஆக 25 தத்துவங்கள்.

மேற்கூறிய 25 தத்துவங்களையும் 73 சுலோகங்களில் வட மொழியில் அருளியவர் ஈசுவர கிருட்டினர். அதன் தமிழாக்கமே இந் நூல்.

இந் நூலாசிரியர் 73 அகவற்பாக்களில் மூல நூலின் உட் கிடக்கையை எவ்வளவு எளிய முறையில் விளக்க முடியுமோ அவ்வளவு தெளிவான நடையில் தந்திருப்பது தத்துவத் துறையிலீடுபட்டுள்ள தமிழறிஞர்களுக்குப் பெருந்துணை செய்வதாகும். சீரிய முறையில் இவ்வரிய பணியைச் செய்து முடித்துள்ள நூலாசிரியர் பாராட்டுக் குரியவர்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர்: வ. சுப்பையா

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

இலக்கியப் புதையல்—*அரங்க கண்ணபிரான், பி.ஏ.*	7	00
மொழி ஆய்வுக் கட்டுரைகள் —*டாக்டர் தி. முருகரத்தினம்*	4	50
தமிழ் நாட்டுப் புறஇயல் ஆய்வு —*டாக்டர். ச. வே. சுப்பிரமணியம்*	15	00
புரட்சிப் பெரியார்—*நெ. து. சுந்தரவடிவேலு*	12	00
காகிதக் கப்பல் —*இந்துமதி*	6	75
பாவேந்தர் நெஞ்சில் குழந்தைகள் —*புத்தனேரி இரா சுப்பிரமணியம்*	5	20
நான் ரசித்த வர்ணனைகள் —*கவிஞர் கண்ணதாசன்*	7	00
பாவங்கள் தர்மங்களாகின்றன—*ப. நீலகண்டன்*	7	00
பெரியார் புரட்சி மொழிகள்—(*அரசு வெளியீடு*)	2	50
சரித்திர நாயகி —*சாந்தி மீனாட்சி*	8	50
புயலுக்குப் பின்—*சி. ஆர். இராஜம்மா*	6	50
ஜோதிடக் களஞ்சியம் (மூன்றும் பகுதி) *ஏ. எம். பிள்ளை*	8	00
வெளிவட்டங்கள்—*எஸ். எம். ஏ. ராம்*	10	00
Studies in the History of India with Special Reference to Tamil Nadu—K. K. Pillai	100	00

பதிவு எண் : M. 4899